
d. No. இரக்தாக்ஷி௵ தை௴ Feb. 1925

# சன்மார்க்க பானு

தொகுதி 1 பகுதி 1



VOL. I- ¦ SANMARGA BANU | No. 1.

OF BOOKS 25 FEB 1925 MADRAS

பொருளடக்கம். பக்கம்.

1. கடவுள்வணக்கம் ... ... 1
2. நமது பத்திரிகை ... ... 2
3. சன்மார்க்கபானு ... ... ... 3
4. தியானம் ... ... ... ... 8
5. முகம்மதிய அரசனும் ஹிந்து அமைச்சனும் 11
6. கல்விக்குறிப்புகள் ... ... ...15
7. இராமகிருஷ்ண சம்பாஷணை ... ...17
8. கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள் ...21
9. தொற்றுவியாதிகள் ... ... .. 24
10. புருஷார்த்தம் ... ... ...26
11. நேயர்களுக்கோர் விண்ணப்பம் ...29
12. வண்ணான் குறியால்வெளிப்பட்ட இரகசியம் 30
13. காலண்டர் ... ... 32

Editor Pandit P. Srinivasalu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன். ... | 1—0—0 |
| | பிநாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப் படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15--0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20--0—0 |

## விளம்பரவிகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூபா. | 10--0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, ,, | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, ,, | ,, | 3—8—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத்தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்பட வேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு.)

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# சன்மார்க்கபானு.

பிரதி பௌர்ணமிகளில் வெளியாகும்.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—(குறள்.)

(ALL RIGHTS RESERVED.)

கற்றை 1 } இரக்தாக்ஷி௵ தைமீ 1925௵ ஜனவரிமீ { கதிர் 1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 FEB 1925
MADRAS

## கடவுள் வணக்கம்.

நித்தியமாய் நின்மலமாய் நிஷ்களமாய் நிர்மயமாய்
  நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய் தூரமுமாய் சமீபமுமாய் துரியநிறை
  சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்தமயமாகி
  மனவாக் கெட்டாச்
சித்துருவாய்நின்ற வொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
  சிந்தை செய்வாம்.

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச்சந்
  தடிகளிலே 'ோத்திரச்சண்டையிலே
ஆதியிலே யபிமானித்தலைகின்ற வுலகீரலைந்தலைந்து
  வீணே நீரழிதலழகலவே
நீதியிலே சன்மார்க்கநிலை தனிலே ஞானநிருத்தமிடுந்
  தனித்தலைவ ரொருத்தரவர்தாமே
வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய
  மேவுகின்ற தருணமிது கூவுகின்றேனுமையே. (2)

ஆடாதிர் சற்றுமசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர்—வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினியிங்
கென்மார்க்கமு மொன்றுமே. (3)

# சன்மார்க்கபானு.

இரக்தாக்ஷி௵ தை௴

## நமது பத்திரிகை.

அகரமுதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றேயுலகு.

என்று, நமது தமிழ்நாடுய்யத் திருவவதரித்த திருவள்ளுவர் அருளிச்செய்தபடி, சராசரவடிவமாகிய சகல பிரபஞ்சங்களுக்கும் முதற்காரணராகிய முழுமுதற்கடவுளின் கருணையால் "சன்மார்க்கபானு" என்னும் இம்மாதாந்தத் தமிழ்ச்சஞ்சிகை வெளிவரலாயிற்று.

ஒருதேசத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானவைகளுள் பத்திரிகையுமொன்றாம். பத்திரிகைகளின் உபயோகத்தையுணர்ந்து அவற்றால் பெரும்பயனடைந்தவை மேல்நாடுகளே. அவ்விடங்களில் கல்வியில்லாத கூலிகளும் பத்திரிகை வாங்கி வாசிக்கத் தெரிந்தவரிடம் கொடுத்து வாசிக்கச்சொல்லி கேட்பார்கள். "பிரான்ஸ்" தேசத்தில் சமீபகாலத்தில் பிச்சைக்காரர்களுக்காகவும் ஓர்பத்திரிகை வெளிப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நம்நாடு நாகரீகத்தில் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கின்றதென்று சொல்லப்படுகிற இக்காலத்திலும் பத்திரிகை என்றால் இன்னதெனத் தெரியாதவர்களும், தெரிந்தும் ஆதரிக்காதவர்களும் கோடிக்கணக்காக இருப்பது துரதிருஷ்டமே. அதிலும் தாய்ப்பாஷைப் பத்திரிகைகளைக் கையால் தொடுவோர் வெகுசொற்பம். இந்நிலையில் தேசாபிமானிகளிற் சிலர் தேசபாஷைப் பத்திரிகைகளை நடத்த முன்வந்தும் எண்ணிய இலக்கை எய்தப் பெறாராயினர். எனினும், இரண்டொரு பத்திரிகைகள் சற்றுசாமானிய நிலையிலிருந்து உலவி வருவது நற்குறியேயாகும்.

பத்திரிகையின் மூலமாக எம்மாலியன்ற ஊழியத்தைத் தாய்நாட்டிற்குச் செய்யவேண்டுமென்னும் ஆவல் எம்முளத்தில் நெடுங்

காலமாகத் தோன்றியிருந்தும் "அடுத்துமுயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்தகருமங்கள் ஆகா" என்றபடி, அக்கருத்து முற்றுப்பெறாமல் சர்வேசுவரனருளால் தற்போது கைகூடுவதாயிற்று. இராணிப் பேட்டை ஸ்ரீ அச்சுதாநந்தாசிர்மவாசியாகிய கோலார்சுவாமிகள் என்கிற, ஸ்ரீமத் சிந்மயாநந்தசுவாமிகளின் பெருங்கருணையே இப்பத்திரிகை தோன்றுவதற்குப் பெருந்தூண்டுகோலாயிருந்தமையின் சுவாமிகளே இதற்குக் காரணகர்த்தராவர். ஆகலின், அவர்கள் நன்றி என்றும் மறக்கத்தக்கதன்றாம்.

நண்பர்கள், குறைந்தசந்தாவையுடைய இதனை ஆதரித்துத் தங்கள் நண்பர்களையும் (ஒவ்வொருவரும் குறைந்தது இருவரையேனும்) சந்தாதாரராகச் சேரச்செய்து உதவிபுரிவார்களாயின் நமது பானுவும் கற்றறிந்த ஆன்றோரால் எழுதப்படும் அரும்பெரும் விஷயங்களாகிய கிரணங்களை வீசிக்கொண்டு பூரணப்பிரகாசத்துடன் மாதந்தோறும் தோன்றி யாவரையும் மகிழ்விப்பான். எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக. சுபம். சுபம். சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ

## சன்மார்க்கபானு.

**சன்மார்க்கம்** என்பது சாதாரணமாக நல்லொழுக்கம், நன்னடக்கை என்று பொருள்படும். இதற்கு எதிர்மறைப்பதம் துன்மார்க்கம். இவ்வுலகத்தில் மனிதராகப் பிறந்தோர் யாவரும் மேற்கொண்டொழுகும் ஒழுக்கத்தைப்பெரியோர் மார்க்கம், நெறி, வழி எனக் கூறுவர். உலகவாழ்க்கை ஓர் யாத்திரை போன்றது. பிறப்பு அதன் தொடக்கம், இறப்பு அதன் முடிவு. ஆகவே, ஒவ்வொருவரும் மேற்கூறிய சன்மார்க்கத்திலேயோ துன்மார்க்கத்திலேயோ பிரயாணஞ் செய்தவண்ணமாகவேயிருக்கின்றனர். ஆனால்,

எந்தப்பிரயாணியும் தன் பிரயாணத்தைத் தொடங்குமுன் "தனக்கு லக்ஷியமாயிருப்பதேது? அதாவது அடையவேண்டிய இடமேது? அதற்குரியவழி அல்லது மார்க்கம் யாது?" என, ஆராய வேண்டியது அத்தியாவசியம். அங்ஙனமின்றி, "எவ்வழியாகவாவது போய் எந்த இடத்தையாவது சேர்வோம்" என்று, கண்ணை மூடிக்கொண்டு எவரேனும் பிரயாணஞ் செய்வரோ? அப்படிச் செய்தால் அவர்கள்

கறியாதாம். அதோர்கதியாகவன்றோமுடியும்! ஆதலின் தான் அடையவுத்தேசிக்குமிடம் அதற்குரியமார்க்கம் ஆகியவிரண்டும் ஒவ்வொருவராலும் ஆராயப்படவேண்டியதவசியம். உலகவாழ்க்கையாகிய யாத்திரையில், சிலருடையவுத்தேசம் ஓரேயிடமாகவும், சிலருக்கு இரண்டிடங்களாகவுமிருக்கக் காணப்படும். அதாவது, இவ்வுலக இன்பத்தில் மாத்திரம் நோக்கமுடையவர் ஒருசாரார்; அதனுடன் மறுவுலகம் அல்லது மோக்ஷமடைவதிலும் விருப்பமுடையவர் மற்றொருசாரார். முதல்சாராருக்குள்ளும் நல்லமார்க்கத்திலேயே சென்று தம் லக்ஷியத்தையடையவேண்டுமென்னும் கொள்கையுடையோர்சிலர். "எவ்வழியாலேனும் சென்று அடையவேண்டியது அவசியம்; வழியைப்பற்றி அக்கறையில்லை" என்றெண்ணித் தம் மனம்போனபடி தாறுமாறாகச் செல்வோர்மற்றொருசாரார். இவ்விருவகுப்பினருள், நல்லமார்க்கத்திற்செல்வோரே தங்கள் இலக்ஷ்யத்தை எய்தப்பெற்று நன்மையடைபவராவர். பின்னவர் செல்லும் வழியானது சில சமயங்களில் நன்மையும் சுகமுமுள்ளதாகக் காணப்பட்டாலும், செல்லச்செல்ல மிக்க சங்கடமான நிலைமையில் கொண்டுபோய்விட்டு திண்டாடச்செய்வதுமன்றி, முடிவில் அதுசேருமிடமும் பயங்கரமானதாகவிருக்கும்.

இவ்வுலக இன்பத்தையும் அதனுடன் முத்தியுலக இன்பத்தையும் இச்சிப்போர் மிக்கபாக்கியவான்களேயாவர். இவர்களேயாவரினும் சிறந்தவர். ஆயினும், இவர்களுக்குள் ஒருசிறு பகுப்பினரே இரண்டிடங்களில் எதுசிறந்தது? என்று ஆராய்ந்து முத்தியின்பத்தையடைதலையே முதன்மையாகவும், இம்மையின்பத்தை இரண்டாவதாகவும் கொண்டு, சரியானவழியிற் செல்வர். மற்றையவர், சரியானவழியிற் செல்லவேண்டுமென்று எண்ணிக்கொண்டும் சொல்லிக்கொண்டுமிருந்தாலும், தவறானவழியிற்சென்று முடிவில் துன்பத்தையேயடைவார்கள்.

இவற்றைச்சிறிது விளங்கக்கூறுவோம். இவ்வுலகஇன்பத்தை மாத்திரம் விரும்புவோர், மறுமை கடவுள் என்பவற்றில் நம்பிக்கையில்லாதவர்கள். இவர்களிலும் ஒருசாரார் பரோபகாரம், பிறர்க்குத் தீங்குசெய்யாமை, அன்னியர்பொருளை அபகரியாமை முதலிய, நற்குணமுடையோராய் சன்மார்க்கத்திலேயே பொருளையீட்டி இன்பமனுபவியாநிற்பர். இம்மையைப் பொருத்தமட்டில் இவர்கள் மார்க்கம் இன்பமான முடிவையேயுண்டாக்கும். மற்றையோர் பொருளீட்டலையே முக்கியநோக்கமாகக்கொண்டு, வஞ்சனை களவு பொய் கொலை

முதலிய தீயகாரியங்களைச்செய்து, முடிவில் அதோகதியையடைவார்கள்.

முத்தியையிச்சிப்பவர்களில்முதற்பகுப்பார், உலகவாழ்க்கை அநித்தியம்; துன்பவடிவம்; நிரதிசயானந்தப்பேறாகிய முத்தியையடைவதற்குத் தடையாயிருப்பது இவ்வுலக ஆசையே என்றறிந்து அதை நீத்து தத்துவஞானசிலராயிருப்பர். இவர்கள் இவ்வுலகத்துள்ளவரையிலும் "நல்லவனேகேள் உலகுபகாரம் ஞானிகள் விவகாரம்" என்றபடி, லோகோபகாரமாக சீவகாருண்யம், நன்றி மறவாமை, அழுக்காறின்மை, சினமின்மை, கள்ளாமை, கள்ளுண்ணாமை முதலியவற்றோடு ஆலயவழிபாடு முதலியவற்றையும் மேற்கொண்டு பயிர் வியாபாரம், இராசாங்ககாரியம் முதலான உலகவியவகாரங்களைச் செய்து கொண்டிருப்பினும் தாமரையிலைநீர்போல் யாதொருபற்றுமின்றியிருப்பர்.

மற்றொரு பகுப்பார், இவ்வுலகஇன்பத்தை முதன்மையானதாகவும் மோக்ஷத்தை இரண்டாவதாகவும் கருதியொழுகுபவர். சிலசமயங்களில் இவர்கள் முத்தியின்பமே முதன்மையானதென்று வாசாஞானம் பேசுவர். தானதருமங்கள் செய்தாலும் முறையறிந்து செய்யார். அநுதினமும் கடவுளைப்பூசித்தல் முதலிய புண்ணியகருமங்களை யியற்றினும் அவர்கள் மனம் இவ்வுலக இன்பத்திலேயே ஆழ்ந்து கிடக்கும். அதற்காகவே கடவுளைப்பிரார்த்திப்பார்கள். "சுவாமி! எனக்கு நூறு ரூபாயும் அரையணாவும் கிடைத்தால், அந்த அரையணாவிற்கு கர்ப்பூரம் வாங்கி உனக்குக் கொளுத்துகிறேன்" என்று பிரார்த்தனைசெய்து கொண்ட பரமபக்தசிகாமணியின் வகுப்பில் சேர்ந்தவர்கள் இவர்கள். பரிதானம் வாங்குதல் பொய்சொல்லல் மோசஞ்செய்தல் மதுபானஞ்செய்தல் முதலிய தீயகாரியங்களைச் செய்து கொண்டே மறுமைக்குரியவற்றையும் செய்யாநிற்பர்.

இன்னம் பலபகுப்பினரிருப்பினும், விரிவஞ்சி முக்கியமானவர்களை மட்டும் கூறினோம். மேற்கூறிய நான்கு பகுப்பினருள், எவர் நல்வழியிற்சென்று நல்லஇடத்தை அடைபவர் என ஆராயின், இம்மை மறுமையிரண்டினும் விருப்பமுடையோரில் முதற்சாராரே என்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

ஆகவே, சன்மார்க்கமாவது நீதி நூல்களிற்கூறியுள்ள விதிவிலக்குகளையறிந்து, விலக்கப்பட்டவைகளை விலக்கி விதிக்கப்பட்ட

வற்றைக்கைக்கொண்டொழுகி, இவ்வுலகத்தில் அறமும் பொருளும் இன்பமும் பெற்றுவாழவும், மறுமையில் அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டையடையவும் முயல்வதாம்.

இனி, சன்மார்க்க மென்பது, "சன்மார்க்கஞ் சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம் தாதமார்க்கமென்று சங்கரனையடையு நன்மார்க்க நான்கு" என்றபடி, கடவுளை வழிபடும் மார்க்கங்கள் நான்கினுள் ஒன்றும். இவைகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்று வழங்கப்பெறும். இவற்றுள்.

சரியையாவது—ஆலயப்பிரதக்ஷிணஞ் செய்தல் முதலியனவாம். இது, தாசன்போல் தொண்டுசெய்தற்குரிய சாலோகபதவியைத் தருவதால் தாசமார்க்கம் என்னப்படும்.

கிரியையாவது—அருச்சனை செய்தலாம். இது, புத்திரன்போல் அருகிற் செல்வதற்குரிய சாமீப்ய பதவியையளித்தலால் புத்திரமார்க்கமாம்.

யோகம்—பொறிகளைப்புலன்களின் வழியிற் செல்லவொட்டாதடக்கி, மனத்தை ஒருவழிப்படுத்தி, கடவுளையே சிந்தித்துக்கொண்டிருப்பதாம். இது, நண்பன்போல ஒத்தவடிவத்தைப் பெற்றிருத்தலாகிய சாரூப பதவியை யளித்தலால் சகமார்க்கம் என்னப்படும்.

ஞானம்—அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சொரூப பரம்பொருள்வேறு தான்வேறு, என்ற பேதஞானம் ஒழிந்து, "சிவோஹம்" பாவனையைக்கொள்ளுதல். இது, இரண்டறக்கலத்தலாகிய பரமுத்தியாகிய சாயுச்சியபதவியை யளித்தலால் சன்மார்க்க மென்னப்படும்.

மேலும், சத்+மார்க்கம்=சன்மார்க்கம். ஆகையால், சன்மார்க்கம் என்பதற்கு, சத்தையடைவிக்கும் மார்க்கம் எனவும் ஒருபொருள் உரைக்கப்படும். ஈண்டு, சத்து என்பது ஆராயத்தக்கது. சத்து=உண்மை அல்லது சத்தியம். "சத்து அதாவது இருப்பது என்று கேட்கப்படும் உணர்ச்சிக்கு லக்ஷியமாயுள்ளது சத்தியமாம்; அல்லது, அசத்து என்று சொல்லக்கூடாதது சத்தியமாம்; அல்லது, முக்காலத்திலும் பாதிக்கப்படாதது அதாவது பொய் என்று நிச்சயிக்கப்படாதது சத்தியமாம்; அல்லது, மூன்று காலத்தும் கலந்திருப்பது அதாவது வியாபித்திருப்பது சத்தியமாம்; அல்லது, எது இருக்கிறதோ

அது சத்தியமாம்; அல்லது, ஒரே அத்விதீயமாயுள்ளது சத்தியமாம்; அல்லது, சஜாதிவிஜாதி பேதமின்றியது சத்தியமாம்; அல்லது, சகல கற்பனைக்கும் அதிஷ்டானம் சத்தியமாம்" என்றசுருதிவாக்கியத்தின்படி, ஞானத்தினாலேனும் மற்றொன்றினாலேனும் எதன் நிவிருத்தியுண்டாகிறதில்லையோ அது சத்து.

மேற்சொன்னபடி மூன்று காலத்திலும் பாதிக்கப்படாத சத்தியவஸ்து எதுவோ அது ஸ்வப்பிரகாசமாயும் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்வதாயுமிருப்பதாம். எனவே சித்தாம். "சுவப்பிரகாசம் ஞானமாம். எல்லாவற்றையும் பிரகாசிப்பிப்பது ஞானமாம். ஆவரணமின்றிய சின்மாத்திரம் ஞானமாம். அநாதி அநந்தமாய் நிரந்தரம் விருத்தியின்றிய விடத்திருக்கும் சாக்ஷிசைதன்னியமே ஞானமாம்" என்பது சித்தின் இலக்கணம். சித்து என்பதற்கு அறிவு அல்லது ஞானம் என்பது பொருளாம்.

எது, சத்தாயும் சித்தாயுமுள்ளதோ அதுவே ஆனந்தமுமாம். கண்டமாய் பிரகாசமின்றிய பொருளிடத்து ஆனந்தமிராது. "பூமா (பரிபூரணம்) எதுவோ, அது சுக ரூபமாம்; அற்ப (பரிச்சின்ன) த்தில் சுகமில்லை" என்பது உபநிஷத்வாக்கியம். ஆதலால் பரிபூரணம் எதுவோ அது ஆனந்தரூபமாம்.

ஆகவே, சச்சிதானந்த வடிவமாகிய பரம்பொருளை அடையும் மார்க்கம் சன்மார்க்கம். அத்தகைய மார்க்கத்தில் செல்லவிடாமல் மாந்தரின் அகக்கண்ணை மறைத்திருப்பது அஞ்ஞானமாம். இது அறியாமையெனவும் அந்தகாரம்எனவும் இருள்எனவும் கூறப்படும். இவ்வஞ்ஞானத்தை யொழிக்கச் சிறந்த கருவியாயிருப்பது ஞானமேயாம் ஞானமாகிய ஒளியைப்பெற்று அஞ்ஞானமாகிய இருளை நீக்காதவரையில் ஒருவரும் கடைத்தேறமுடியாது இம்மை மறுமையிரண்டிலும் அவர்கள் அடைவது துன்பமே. குருடன் நல்லவழியிற்செல்ல முடியாதன்றோ.

இராசாங்கவுத்தியோகம், வாணிபம், வியவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளிலுள்ளோரும், கணவரும் மனைவியரும், பெற்றோரும் பிள்ளைகளும்—உபாத்தியாயரும் மாணவரும் என்னும் பரஸ்பரசம்பந்த முடையோருமாகிய இல்லறத்தோரும், துறவறநெறியிலிருப்போரும் தத்தம் கடமைகளைச் சரிவரச்செய்யாமல் தவறுவதற்குக் காரணம் இவ்வறியாமை யென்னும் அஞ்ஞானமே

யாம். அவ்வக்கடமைகளை யறிந்து அவற்றின்படி யொழுகி இம்மை மறுமைப் பயன்களை யடைவதே மனிதப் பிறப்பின் பயனாகும். அந்த மார்க்கமே சன்மார்க்கம். அவர்களே சன்மார்க்கர்.

இந்நெறியை யறிந்து நடப்பதற்குத் தாய்ப்பாஷைக் கல்வியே சிறந்த வழிகாட்டியாகும். நமது தாய்ப் பாஷையாகிய தமிழ் தற்காலம் எந்த நிலையிலிருக்கின்ற தென்பதை நினைத்தால் எந்தத் தேசாபிமானியும் கண்ணீர் விடாமலிரார். நமது தாய்ப்பாஷை சிறந்து விளங்காத வரையிலும் நமது தேசமும் சிறப்படையாது; நமது மதமும் சிறப்படையாது; நமது ஆசாரமும் சிறப்படையாது. எல்லாம் சீர்கெடும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. நம்மவர்கள் எப்பொழுதுதான் இதையுணர்வார்களோ!

தற்காலம் சீர்குன்றியிருக்கும் நமது தாய்ப்பாஷையின் சிறப்பையும், இலௌகிக ஆன்மார்த்த விஷயங்களினுண்மையையும் நம்மவர்க்குணர்த்தி அவற்றில் பூரணஞானமுண்டாகும்படி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருத்தலின் இப்பத்திரிகை சன்மார்க்கபானு வென்னும் பெயர் புனைவதாயிற்று.

இது, தனது நோக்கத்தின்படி யாவர்க்கும் சன்மார்க்கத்தைக் காட்டி நாட்டிற்கு நற்பயனளிக்குமாறு செய்யும்படி சர்வ வல்லமையுள்ள சச்சிதானந்தத் தனிப்பொருளை தியானிப்போமாக. "பலனைஎதிர்பாராதே; உன்கடமையைச்செய்". (பகவத்கீதை)

ஓம் தத் ஸத்.

## தியானம்.

கமலாசனனாதிய கடவுளர் எவரை வேத தோத்திரங்களால் துதிப்பார்களோ, சாமவேதிகள் ருக் எஜுஸ் அதர்வண மென்னும் மூன்றுவேதங்களைச் சேர்த்து உபநிஷதங்களுடன் எவரைக் கானஞ் செய்வார்களோ, யோகியர் தியானத்தழுந்திய மனத்தால் எவரைக் காண்பார்களோ, சுரர் அசுரர் ஆகிய இருவரும் எவருடைய அந்தத்தை அறியமாட்டார்களோ அத்தேவரை நமஸ்கரிக்கின்றேன்.

இங்கு தியானம் என்பது ஆராயத்தக்கதாம். தியானிக்கத்தக்க வஸ்துவை விஷயிக்கும் சித்த ஏகாக்கிரதையைப் பொதுவாகத் தியானம் எனப்

படும். இது இயம, நியம, ஆசன, பிராணுயாம, பிரத்தியாகார, தாரணு, தியானம், சமாதி என்னும் யோகஅங்கம் எட்டனுள் ஒன்ரும். அஹிம்சை, சத்யம், அஸ்தேயம், பிரம்மசரியம், அபரிக்கிரகம் என இயமம் ஐந்து வகைப்படும். (1) பிராணிகளுக்குத் துரோகஞ் செய்யாமை அஹிம்சை. (2) வாக்கு மனங்களின் மெய்மை சத்தியம். (3) வஞ்சகத்தால் பிறர் பொருளை அபகரியாதிருத்தல் அஸ்தேயம். (4) சாஸ்திரம் விலக்கும் மதுனநிவர்த்தி பிரம்ம சரியம். (5) இம்சையாதிய கணக்கற்ற குற்றங்களாற் பொருளைக் கிரகிக்காமை அல்லது தர்ம விரோதமாகப் பிறர் பொருளைக் கிரகியாதிருத்தல் அபரிக்கிரகமாம். சௌசம், சந்தோஷம், தபம், சுவாத்யாயம், ஈசுவரப் பிரணிதானம் என்று நியமம் ஐந்து வகைப்படும். (1) சௌசம், அகம் புறம் என இருவகையாம். மண் ஜலம் முதலியவற்ருல் உடம்பினழுக்கைக் கழுவுதல் புறச்சௌசமாம். அன்பு இரக்கம் முதலியவற்ருல் மன அழுக்கைக் கழுவுதல் அகச்சௌசமாம். (2) வாய்த்ததைக் கொண்டு திருப்தி அடைவது சந்தோஷமாம். (3) சாந்திராயணம் முதலிய விரதங்களை யனுஷ்டித்தலும், பசி தாகம் வெப்பதட்பங்களைச் சகித்துக் கொள்ளுதலும் தபமாம். (4) மோக்ஷசாஸ்திரங்களைப் படித்தல் அல்லது பிரணவம் முதலிய மந்திரங்களை ஜபித்தல் சுவாத்யாயமாம். (5) பரமகுருவாகிய பரமேசுவரனிடத்தே சகலகர்மங்களையும் அர்ப்பித்தல் ஈசுவரப் பிரணிதானமாம். ஸ்திரமாகவும் சுககரமாகவும் இருக்கை ஆசனமாம்; மற்றும், பத்மம் சுவஸ்திகம் பத்ரம் என்னும் பல் வேறு வகைப்படும். சுவாசப்பிரசுவாசங்களின் சுபாவநடையைச் சாஸ்திரமுறையாகத் தடுத்தல் பிராணுயாமமாம். கண்முதலிய இந்திரியங்களைத்தத்தம் உருவம் முதலிய விஷயங்களிற் சேரவொட்டாமல் தடுத்து, மேல்படிகளானதாரணுதியானங்களில் சித்தத்தைப் பொருந்தச் செய்வது, பிரத்தியாகாரமாம். இருதயம் முதலிய இடங்களில் சித்தத்தைச் சலிக்காது நிறுத்துதல் தாரணையாம், தாரணஞ் செய்யப்பட்ட இடத்தில் தியானிக்கும் வஸ்துவுக்கு இதரமான வஸ்துக்களை வரவொட்டாமல், தான்தியானிக்கும் வஸ்துவாகிய தியேயம் மாத்திரமாகப் பாவனைபண்ணுதல் தியானமாம். தியானிக்கும் வஸ்துவாகிய தியேயமாத்திரமாகி தியாத (தியானிக்கிறவன்),தியானம் என்னும் திரிபுடி (மூன்றின் சேர்க்கை; அதாவது தியானிக்கிறவன், தியானம், தியானிக்கப்படும் வஸ்து அல்லது தியேயம் இம்மூன்றின் சேர்க்கைக்குத் திரிபுடி எனப்பெயர்.) அற்றநிலையே சமாதியாம். இயமம் முதல் பிரத்தியாகாரம் வரையுமுள்ள ஐந்தும் யோகத்திற்குப் பகிரங்கசாதனங்களும் தாரணுதியானம் சமாதி என்னும் மூன்றும் அந்தரங்க சாதனங்களுமாம்.

இத்தியானம் சகுணம் நிர்க்குணம் என இருவகைப்படும். சப்தாதி விஷயங்களினின்றும் செவிமுதலிய புறக்கரணங்களை மனத்தே ஒடுக்கித் தனக்குப் பிரியமான ஓர் தெய்வத்தைச் சாஸ்திர சம்மதப்படி சதுர்ப்பு

ஜாதி ரூபந்தரித்த தியேயவஸ்து வாக்கி, அதனிடத்தே சித்தத்தை ஏகாக்கிரப்படுத்திச் சிந்தித்தல் சகுணத்தியானமாம். பிரணவபதப் பொருளைத் தியேயமாக்கி அதற்கு அயலான விருத்திகளில்லாமல் தன்னின விருத்திகளைத் தைலதாரைபோல் சந்ததம் இடைவிடாமல் சிந்தித்தல் நிர்க்குணத்தியானமாம். இவைகளை மேல் விபகரிக்கப்படும்.

இத்தியானத்தைச் சாதன சதுஷ்டயங்களுக்குப் பின்வரும் சிரவண மனனங்களுக்குப் பலமாகிய நிதித்தியாசன மென்று சிலர் சொல்வர் உபாசனை என்றும் சிலர் உரைப்பர்.

சுகிருத புருஷர்களுக்கு இத்தியானம் ஒரு முறை அல்லது பலமுறை பழகுதலால் உண்டாகும். சிலருக்கு அநேக ஜன்மங்களிலும் கிடைப்பது துர்லபமாம்.

இத்தியானத்திற்குச் சித்த ஏகாக்ரமே (சித்தம் ஒருமுகமாதலே) முக்கிய சாதனமாம். அது உண்டாவது மிகப்பிரயாசை என்பதைப் பெரியோர்களும் சொல்லியிருக்கின்றார்கள். கட்டுக்கடங்காக் காட்டுக் குதிரையையும் மதயானையையும் கைவசப்படுத்துதல் கூடும். பாம்புகளைப் புற்றினின்றும் வெளிப்படுத்தி கைவசப்படுத்தல் கூடும். நெருப்பில் பாதரசத்தை விட்டு பஞ்சலோகத்தையும் பரிசவேதிசெய்து விலைப்படுத்தி அவ்வருவாயைக்கொண்டு உண்டு பிழைக்கலாம். ஒருவரும் பாராதிருக்க உலகத்தில் சஞ்சரிக்கலாம். விண்வாசிகளான தேவர்களையும் ஏவல் கேட்கும்படி செய்யலாம். இளமைப்பருவத்துடன் எக்காலமுமிருக்கலாம், வேறொருசரீரத்திலும் பிரவேசிக்கலாம். பூமியின்பேரில் நடப்பதுபோல் நீரின்மேல் நடக்கலாம். நெருப்பின்மேல் தங்கியிருக்கலாம். தனக்கு நிகரில்லாமல் மற்றைச் சித்திகளையும் அடையலாம். சித்தத்தைப் புறஞ்செல்லாதடுத்து சும்மா இருக்கும் வகை அருமை அருமையாம்.

ஆதலால், சித்தவடக்கம் எளிதல்ல. அதைக்காட்டிலும் சித்தி வேறில்லை. அது இல்லாமல் மற்றைச் சித்திகளால் ஒருவன் மேன்மையை அடைய முடியாது. சித்தமடங்கினுல் எல்லாம் கைகூடுமென்பதையே இங்கு வியந்துரைக்கப்பட்டது. சித்தசாஞ்சல்யம் தியானத்திற்குப் பெருந்தடையாம். ஆத்மசிந்தனையை ஆரம்பிக்குங் காலத்தில் சித்தம் சஞ்சலப்பட்டு அங்கு மிங்கும் ஓடி அலைவதால் ஆத்மசிந்தனையில் மூழ்குதல் அவலமாகும். சித்த சலனத்திற்குப் பாதரசத்தையும் பேயையும் காற்றையும் குரங்கையும் காற்றூடியையும் உவமிப்பதுண்டு. மனம் உருவமில்லாததாளுலும் அது மனிதர்களை ஆட்டி அலைவிப்பது அற்பமாயில்லை. ஓர் பெரியவரிடம் சென்று உபதேசத்தைக் கேட்கும்பொழுது வீட்டு விஷயங்கள் ஞாபகத்திற்கு வருமாகில் அவருடைய உபதேசம் காற்றில் கலந்து சித்தம் விஷயத்

தில் மாழ்கியதாகின்றது. இந்த சித்தசாஞ்சல்யம் நமக்கு அனுபவ வேத்ய மாயிருக்கின்ற தல்லவா? ஜபம் செய்யத்தொடங்கினவன், கையில் ஜப மாலை உருண்டுகொண்டிருக்கும்; வாய் பகவான் நாமங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும்; அவன் சித்தம் ஏதோ ஓர் விஷயத்தை நாடிநிற்கும். ஆலயத்திலேனும் வீட்டிலேனும் தெய்வத்தை ஆராதிக்கும்போது கண் அதைக்காணும்; கை அதற்கு மலரைத்தூவும்; மனமோ வேறொன்றைக் கருதும்; ஆதலால், சித்தசாஞ்சல்யம் தியானத்திற்குப் பெருந்தடையாம். சித்தம் சலனமின்றி ஒன்றில் நிலைப்பது வாலாயமாய்ப் பலகால் பழகுத லால் வருமேயல்லாமல் ஒருமுறையில் வந்துவிடாது. சித்த ஏகாக்கிரத் திற்கு நோய், அசக்தி, சம்சயர், அசரக்கிரதை, சோம்பல், விஷயவிருப் பம், விபரீதநிச்சயம், ஏதேனுமொருகாரணத்தால் இச்சித்தது சித்தியாமை என்பவை தடைகளாம். துக்கம், மனத்தளர்ச்சி, மூச்சு அதிகமாகப் போதல் வருதல் ஆகிய இவை சித்தக் கலக்கத்துக்குத் தோழமைகளாம்.

(இன்னும் வரும்.)

க. ரங்கநாதப் பிள்ளை,

வேதாந்த தர்க்க போதகாசிரியர் சென்னை.

## "முகம்மதிய அரசனும் ஹிந்து அமைச்சனும்"

ஒருதேசம் முன்னேற்றமடைய வேண்டுமானல் முக்கியமாக அதன் ஜனங்களுக்குள் ஐக்கியம் அல்லது ஒற்றுமை அவஸ்யமானது என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனல், தற்காலம் நம் இந்தியாவானது பல காரணங்களால் மதச்சண்டையிலும் ஜாதிச்சண்டையிலும் (ஹிந்துக்கள் முகம்மதியர்களைத் தூஷிப்பதிலும் பிராம்மணர்கள் சூத்திரர்களை நிந்தனை செய்வதிலும்) முழுகி பலரும் பரிகாசம் செய்யும்படியான மிகவும் தாழ்ந்த நிலைமையை அடைந்திருப்பதுடன் மஹாத்மா காந்தி முதலிய மகான்கள் ஐக் கியத்திற்காகப்படும் பாடுகளும் எடுத்துக்கொள்ளும் சிரமங்களும் சில சம யங்களில் வீணாக முடிவதை நாம் காண்கிறோம். இதற்குக் காரணங்கள் பல இருப்பினும், அன்னியர்களால் எழுதப்படும் தேச சரித்திரங்களே அவைகளில் ஒன்றாக இருந்து ஒற்றுமை யின்மைக்குக் காரணமாகின்றன என்பது பலரின் அபிப்பிராயம். இச்சரித்திரங்களில் அனேகமாய் ஒவ் வொன்றிலும் மதபேதங்களினால் உண்டான சண்டைகளும் கொடுமைக ளும் ஒன்றுக்குப் பத்தாக விஸ்தரித்தும் வற்புறுத்தியும் எழுதப்பட்டிரு ப்பதுடன் இந்தியாவில் ஒற்றுமையென்பது எக்காலத்திலாவது எந்த

அரசனுடைய ஆட்சியிலாவது இருந்ததா என்ற சந்தேகம் அவைகளைப் படிப்போர் மனதில் எழும்படி எழுதப்பட்டிருக்கின்றன. நம் தேசமானது ஒற்றுமைப்பட்டு முன்னுக்கு வரவேண்டுமானால் இம்மாதிரியான சரித்திரங்கள் நம் நாட்டினின்றும் விலக்கப்படவேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும். இதற்காக அனேக தேசாபிமானிகளும் சரித்திர ஆராய்ச்சி நுட்பமுடையவர்களும் அரும் பாடு பட்டுப் பல அரிய பெரிய நூல்களைச் சோதித்து உண்மையை அறிந்து புது சரித்திரங்களை எழுதி தேசத்திற்கு நன்மை செய்துகொண்டு வருகிறார்கள். இம்மாதிரியான சரித்திரங்களில் வெளிவரும் விஷயங்கள், முற்காலத்தில் அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பிரஜைகளுக்கும் இருந்த ஒற்றுமையையும் அன்பையும் காண்பிப்பதுடன், அரசன் பிரஜைகளிடத்திலும் மந்திரியினிடத்திலும் மத வித்யாஸமாவது ஜாதிவித்யாஸமாவது பாராது அவர்களைப் பக்ஷ பாதமின்றி நடத்திவந்தது மன்றி, எந்த மதஸ்தராக இருப்பினும் அவரவருடைய திறமைக்குத் தக்கபடி இராஜாங்கத்தில் மந்திரி பிரதானி முதலிய உயர்ந்த உத்தியோகங்கள் அளித்தும் அவர்களுடைய ஸாமர்த்தியம் முதலியவைகளைக்கண்டு அகமகிழ்ந்து பெருமையடைந்தும் இருந்தார்கள் என்பதையும் நன்கு விளக்குகின்றன. இதற்கு உதாரணமாக, டில்லிமாநகரில் அரசாண்ட மொகலாய சக்கிரவர்த்திகளில் ஒருவராகிய அக்பரைப் பற்றி வெளியாகியிருக்கிற விஷயங்களில் சிறியவைகளாயுள்ள இரண்டொன்றை இங்கே எடுத்துக் கூறுவோம்.

அக்பருக்கு பர்பல் என்றொர் பிரதம மந்திரி இருந்தார். அவர் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர். மிகவும் புத்திசாலி. ஸமயோசிதம்போல் நடந்து கொள்வதிலும், முன்பின் வருவதைத் தீர்க்கமாக ஆலோசித்து அரசனுக்குச் சரியான நற்போதனை செய்வதிலும் அவர் மகா நிபுணர். ஆகையால் அக்பருக்கு அவரிடத்தில் மிகுந்த மரியாதையும் சகோதர வாஞ்சையுமுண்டு. அவருடைய சாதுர்யத்தையும் புத்திநுட்பத்தையும் அடிக்கடி கண்டு, மனம்பூரித்து, தனக்கு இம்மாதிரியான மந்திரி கிடைத்தது பெரும் பாக்கியமே என்றெண்ணி அக்பர் அல்லாவை மனமாரத் துதித்து, அவர் வெகுகாலம் ஆயுளுடன் க்ஷேமமாக இருக்கவேண்டுமென அடிக்கடி பிரார்த்திப்பதுண்டு சக்கிரவர்த்தி பர்பல்லிடம் இவ்வளவு பிரியமாக இருப்பதைக்கண்ட மற்ற மந்திரி பிரதானிகள் எல்லோரும் அவரிடத்தில் பொறாமை கொண்டு அக்பருக்கும் அவருக்கும் எப்படியாவது மனஸ்தாபம் உண்டாகும்படி செய்து விட்டால் பிறகு தாங்கள் அரசனுடைய பிரியத்தைச் சம்பாதித்து விடலாம் என்ற கெட்ட எண்ணத்துடன் பலதடவைகளில் பிரயத்தினம் செய்து பார்த்தார்கள். ஆனால் பர்பல் தன்னுடைய திறமையினால் ஒவ்வொரு தடவையிலும் அவர்களுடைய பிரயத்தினங்களை வீணாக்கியதுடன் அவர்களுக்கு இராஜ சபையில் அவமானத்தையும் ஏற்படு

த்தி வைத்தார். அதனால் அவர்களுடைய பொறாமை அதிகரித்து, “இவனை அடியோடு கவிழ்த்து 'விடுவதற்குத் தக்க தருணம் எப்போது வாய்க்கும்” என்று எதிர் பார்த்திருந்தார்கள். இந்த விஷயம் அக்பருக்குத் தெரிந்தபோதிலும் அவர் பர்பலைப் பலதடவைகளிலும் பரிக்ஷை செய்து அவருடைய திறமையை முற்றும் அறிந்தவரானபடியாலும், இவர்கள் எவ்வளவு பேர்தான் சேர்ந்தபோதிலும் பர்பலுக்கு இணையாக மாட்டார்கள் என்பதை அறிந்தவரானபடியாலும், அவர்களுடைய சூட்சிகளினின்றும் வெகு இலகுவாய் அவர் தப்பிவிடுவார் என்ற நம்பிக்கை இருந்தபடியாலும், அக்பர் சில சமயங்களில் பர்பலை பரிக்ஷை செய்யும்படி விட்டு விட்டு வேடிக்கை பார்ப்பது முண்டு.

இப்படியிருக்க ஒருநாள் பர்பல் இராஜதானியின் தலை நகரமாகிய டில்லியைவிட்டு வெளியே போகும்படி நேர்ந்தது. எப்பொழுது சமயம் வாய்க்கும் என்று நெடுநாளாக ஆத்திரத்துடன் காத்துக்கொண்டிருந்த மந்திரி பிரதானிகள் இந்த நற்றருணத்தை விட்டு விடக்கூடியவர்களா? பர்பலிடத்தில் பலதடவை அவமானமடைந்து பொறாமை கொண்டிருக்கும் அரண்மனையிலுள்ள ஓர் அலியைக் கூப்பிட்டு (அலி = ஆணுமல்லாமல் பெண்ணுமல்லாமலிருக்கும் நடுப்பிறவிக்கு அலி எனறு பெயர்) “நீ அரசனிடம் போய் எப்படியாவது பர்பலுக்கு அவமானம் ஏற்படும்படி செய்து விட்டு வரவேண்டும்” என ஏவி அனுப்பினார்கள். அதற்கிணங்கி அவ்வலி அரசனை அணுகி, “பிரபுவே! தங்கள் பிரதான மந்திரி மிகவும் புத்திசாலியெனப் பெயர் பெற்றவராயிற்றே. நான் மூன்று கேள்விகள் கேட்கிறேன். அவைகளுக்கு மாத்திரம் அவர் விடையளித்து விட்டால் அவர் கெட்டிக்காரர்தான். ஆனால் அவரால் முடியாதென்பது நிச்சயம். என்று பரிகாசமாகச் சொன்னாள். அதைக் கேட்ட அக்பர் அவை யாதாகத்தான் இருக்கக்கூடுமென ஐயமுற்று, “சரி, அக்கேள்விகளை எனக்குச் சொல்பார்ப்போம்” என்றார். உடனே அந்த அலி தன் மூன்று கேள்விகளையும் உரைக்கலானாள். அவையாவன:—

1. நாம் வசிக்கும் இப்பூமிக்கு மையம் எது?

2. ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களின் சங்கியை எவ்வளவு? (ஒன்று கூடபிசகாமல் சொல்லவேண்டும்)

3. இப்பூமியில் இந்த க்ஷணத்திலுள்ள ஜனத்தொகையில் ஆண்பிள்ளைகள் எவ்வளவு? பெண்பிள்ளைகள் எவ்வளவு? (கொஞ்சம்கூடப் பிசகின்றிச் சொல்ல வேண்டும்),

இக்கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த அக்பர் “அவைகளுக்கு விடையளிப்பது முடியாத காரியம். பர்பல் இந்த சமயம் அவமானமடைய

வேண்டியது தான் போலிருக்கிறது என மனச் சோர்வடைந்தாராயினும் ஒருக்கால் அவர் தன் ஸாமர்த்தியத்தினால் தப்பிக்கொள்ளலாம் என எண்ணி அவ்வலியைப் பார்த்து, "சரி, நீ போ. பர்பல் இப்போதிங்கில்லை. வந்ததும் உன்னைத் தருவித்து உன் முன்னிலையிலேயே இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்," என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு மறுநாள் பர்பல் வந்ததும் சபை கூட்டி அவளைத் தருவித்து அவருக்கு இக்கேள்விகள் மூன்றையும் முறையே சொல்லி விடையளிக்கும்படி வேண்டினர். இக்கேள்விகளைச் சொல்லி முடியும் வரையில் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த பர்பல் நடந்த விஷயங்களை அதிசீக்கிரத்தில் ஊகித்துக்கொண்டு அரசனையும் சபையையும் பார்த்து, "இது தானா ஒரு பிரமாதம்! தயவு செய்து எனக்கு ஐந்து நிமிஷ அவகாசம் கொடுக்கவேண்டும். இக்கேள்விகளுக்கு பதிலளிக்க எனக்கு மூன்று ஸாமான்கள் வேண்டும். ஓர் இருப்புப் பாறை; மயிரடர்ந்த ஓர் செம்மறியாடு; நம் அரண்மனை அலி. இம்மூன்றையும் தருவிக்கும் வரையில் அனுமதி கொடுக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு இம்மூன்றையும் தருவிக்கும்படி தன் வேலைக்காரர்களுக்கு உத்திரவளித்தான். அவை வந்து சேர்ந்ததும் முதலில் அந்த இருப்புப் பாறையை எடுத்து அரசனுக்கு முன்னிலையில் பூமியில் நட்டு வைத்து செம்மறியாட்டையும் அலியையும் அதன் பக்கத்தில் நிறுத்தி அக்பரைப் பார்த்து, "அரசே! உங்கள் முதல் கேள்விக்கு பதில்: இதோ பாறை நட்டிருக்கிற இடம் தான் இப்பூமிக்கு மத்தி; ஸந்தேக முள்ளவர்கள் அளந்து பார்க்கலாம். இரண்டாவது கேள்விக்கு பதில்: இதோ இருக்கும் செம்மறியாட்டின் சரீரத்தில் எவ்வளவு மயிர்க்கால்புகள் இருக்கின்றனவோ அவ்வளவே நக்ஷத்திரங்கள் தான் ஆகாயத்திலிருக்கின்றன. சந்தேக முள்ளவர்கள் இரண்டையும் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். மூன்றாவது கேள்விக்கு பதில் தான் கொஞ்சம் ஸந்தேகத்திலிருக்கிறது. இந்தப் பூமியிலிருக்கும் ஆண்களின் சங்கியையும் பெண்களின் சங்கியையும் கணக்கிட்டு விட்டேன். ஆனால் ஆணுமன்றிப் பெண்ணுமன்றி இரண்டும் கெட்டதாய் இங்கே நிற்கும் அலியைப் போல் அநேகம் ஜந்துக்கள் இருக்கின்றனவே. அவைகளை எதில் சேர்க்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. அவைகளையெல்லாம் ஒழித்து விட்டீர்களானால் சந்தேகமற விடையளிக்கிறேன்" என்று சொல்லி முடித்தார். தான் எதிர்பாராத விதமாய் வரும் ஒவ்வோர் விடையையும் மிகவும் ஆச்சர்யத்தோடு கேட்டுக்கொண்டிருந்த அக்பர் மிகவும் சந்தோஷமடைந்து பர்பலை மிகவும் மெச்சிக்கொண்டு அவ்விடைகள் சரிதானா என்று கேட்கும் பொருட்டு அலி நிற்கும் பக்கம் திரும்பினபோது அவ்வலி அங்கே காணப்படவில்லை. காரணமென்ன என்று விசாரிக்கும்போது, சபையில் அவமான மடைந்ததனாலும் தன் உயிருக்கே அபாயம் வந்து விடுமென்ற பயத்தாலும் அரண்மனையை விட்டு ஓடி விட்டதாகத் தெரியவந்தது. (தொடரும்)

K. நடேச அய்யர், B. A. L. T., சித்தூர்.

# கல்விக் குறிப்புகள்.

## நவீன சரித்திர போதனை முறை.

நாகரீகம் முதிர்ந்த தற்காலத்தில் பல தேசங்களும் ஒன்றோடொன்று கடும் போர் புரியும் பாதகச் செயல்களை விட்டொழியா திருப்பினும், போரின் கொடுமை உலகத்தாரின் மனதில் ஆழ்ந்த ரீதியை ஏற்படுத்தி விட்டதென்பதை நாம் எளிதில் காண்கின்றோம். சண்டைகளை வேரோடழித்து நிரந்தரமான சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமெனும் ஆவல் தீவிரமான சிந்தனை செய்யும் தன்மைய சிறந்த மேன்மக்களின் மனதில் உதித்திருக்கின்றது. அதற்கேற்ப அவர்கள் பல ஏற்பாடுகள் செய்து வந்து கொண்டிருக்கின்றனர். அவைகளில் 'லீக் ஆப் நேஷன்ஸ்' அதாவது பலதேசக் கூட்டுறவுச் சங்கம் என்பது ஒன்று. அதன் வாயிலாக பல தேசத்தார்களும், தமக்கும் பிறதேசத்தவர்க்கும் ஏற்படும் உள்நாட்டு விஷயங்களைப் பற்றியன தவிர வினைய அபிப்பிராய பேதங்களைப் போக்கி ஒழுங்கு படுத்திக்கொள்ளுகின்றார்கள். எனினும், அபிப்பிராய பேதங்களைத் தீர்க்கும் விஷயத்தில் போர் கண்டிக்கத்தக்க தெனினும் இன்றியமையாத தென்ற கோட்பாட்டை யுடையவர் மிகுந்திருக்கும் இக்காலத்தில் சமாதானம் நிலை பெறும்படி செய்யும் ஏற்பாடுகள் வியர்த்தமாய்ப் போய்விடு மாகையினால், சமாதானம் வேண்டுமென்ற நம்பிக்கையும் பூர்ணமான உணர்ச்சியும் முதன்மையாய் இருத்தல் அவசியமாதலாலும், அத்தகைய நம்பிக்கையும் உணர்ச்சியும் இனி உலகத்தின் முற்போக்கின் பொறுப் பைத்தாங்கும் நமது சிறுவர் சிறுமிகளின் மனதில் வேரூன்றச் செய்தலே நிலைபெற்ற சமாதானத்திற்கு அடிகோலுவதாகு மெனவும், ஆழ்ந்த அறிவுடையோர் பலர் அபிப்பிராயப் படுகின்றார்கள். ஆகவே, நமது கல்வி போதனை முறையை ஓரளவு மாற்றி முற்கூறிய லட்சிய நிறைவேற்றத்திற்குத் தக்கவாறு அதை அமைத்துக் கொள்ள வேண்டு மென்பது மேற்கண்ட அறிஞர்களது துணிபு. அவ்வித லக்ஷியத்தை நிறைவேற்ற சரித்திரமே போதிய சாதனமாயிருக்கு மென்பது யாவருக்கும் ஒப்ப முடிந்தது. ஆகவே, தற்போதைய சரித்திர போதனை முறையை மாற்றி இனி உலக முற்போக்கிற்கும் உலகசினேக சமாதானப் பேற்றிற்கும் இசைய அமைக்க வேண்டுமென்பது அவரது எண்ணம். இதற்கேற்பப் பின்வரும் ஏற்பாடுகள் பலவற்றைத் திட்டஞ் செய்திருக்கிறார்கள்: தத்தமது தேச நாகரீகத்தையும் தேசத்தின் கல்வி பொருள் செல்வங்களையும் வெகுவாய் உயர்த்திப் பேசி ஒரு வித ஜாதிய தேசியகர்வமும் மமதையும் ஜனிக்கச் செய்யும் முறையை அறவே ஒழிக்க வேண்டும். இது வரையில் போதிக்கப்பட்டு வந்திருக்கும் தேச சரித்திரம் அவரவர் தேசத்து ராசிய ராணுவ விஷயங்களையே பெரும்பான்மையும் தழுவி வந்திருக்கின்றது. அதைத் தவிர்த்தல் அவசியம். நாக

ரீக முற்போக்கும் உலக மனவொற்றுமையும் சமாதனமுமே சரித்திர போதகாசிரியரது முதன்மையான லக்ஷியங்களாயிருத்தலவசியம். ஜாதிய தேசிய கர்வத்தையும் பிற ஜாதியாரிடத்தில் வெறுப்பும் பிறப்பிக்கும் படியாய் சரித்திரம் போதிக்கப் படக்கூடாது. ஒரு தேசத்தின் சரித்திரம் எழுதுவோருடைபவும் அவரது தேசத்தாருடையவும் விருப்பும் வெறுப்புமின்றி தேச நிகழ்ச்சிகளை உள்ளபடி எடுத்துச் சொல்லும் தன்மையதாய் எத்தேசத்தவராலும் போதிக்கும் படியாயிருத்தல் வேண்டும்.

மேற்கூறிய லக்ஷியங்களைக் கடைப்பிடித்து நடக்க முன் வந்திருப்பவர்களில் ஜர்மானியரே முதன்மையானவர் என நாம் வெகு ஆச்சரியத்தோடு கேள்விப்படுகிறோம். பள்ளிக்கூடங்களில் உபயோகப் படுத்தப்படும் சரித்திர புத்தகங்களில் துப்பாக்கி முதலிய போர்க்கலங்களையும், போர் வீரர்களையும், சேனாதிபதிகளையும் பற்றிய விபரமும் படங்களும் புகுத்தப் படக் கூடாதெனவும், கைத்தொழிலபி விருத்தி நாகரீக முன்னேற்றம் முதலிய விஷயங்களே முதன்மையாய் விளக்கப்படவேண்டுமென்றும் ஓர் புதிய விதி ஜர்மனியில் பல விடங்களில் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே, இத்தகைய ஏற்பாடுகள் நமது இந்தியாவிற்கு எவ்வளவில் ஏற்றவை என நாம் பரிசீலனை செய்தல் வேண்டும். நமது சரித்திரம் இது வரையில் மேல் நாட்டு சரித்திர வாதிகள் பலராலும் நமது தேசத்தவராகிய இந்தியர் ஒரு சிலராலுமே எழுதப்பட்டு வந்திருக்கின்றது. நமது தேச நாகரீகம் கிறிஸ்து பிறந்த 1000 அல்லது 1500 வருஷங்களுக்கு முற்பட்டது தான் என மேல் நாட்டார் வாதிக்கவும், கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருஷங்களுக்கு முற்பட்டதென நம்மவர் வாதிக்கவுமாக ஏறுமாறாக இருந்து வருகின்றது.

நமது தேச சரித்திரத்தை நம்மவரே ஆராய்ந்து எழுதல் வேண்டும் என்ற ஆவலும் உணர்ச்சியும் மிகுந்து தற்போது இந்தியரிற் பலர் அவ்வித ஆராய்ச்சியில் ஈடுபட்டுழைப்பது மிகுந்த நன்மையைத் தருவதாகும். எனினும், அவ்வித முயற்சியில் நம்மவர் நமக்கிருக்கும் சாதனங்களை ஆராய்ந்தறிந்து நிர்மலமான மனதோடு விஷயங்களை நிர்ணயிக்க வேண்டும் என்பது நமது துணிபு.

இது நிற்க, ராசீய தேசிய உணர்ச்சி பெரும் பான்மை காணப்பெறாத நமது இந்தியாவின் தற்போதைய நிலைமையில் மேல்நாட்டுக் கல்வி வெகுவாய் வியாபித்து விட்டதன் காரணமாய் நமது நாகரீகத்தின் நேர்மையையும் போக்கையும் பாங்கையும் கண்டு கொள்ளாது நாஸ்திகராயும் தேசாபிமானமில்லாதவராயும் வளர்ந்து வரும் நமது இளைஞருக்கு எவ்விதம் சரித்திரம் போதிக்கப்பட வேண்டும் எனவும் மேல் நாம் கூறியிருக்கும் தத்துவங்கள் எவ்வளவில் ஏற்றுக்கொண்டப்பியசிக்கத் தக்கவை எனவும் ஆராய்தல் அவசி

யமாகும். தேசிய உணர்ச்சி முதன்மையாய் எழுந்துலவும் விதம் நமது தேச சரித்திரம் எழுதப்படவேண்டும். பின்பு அவ்விதம் போதிக்கப்படவேண்டும். போதிக்கையில் கிரமமாக நாம் எவ்வளவில் நமது முன்னோரது நேர்மையையும் மேன்மையையும் கண்டு களித்து அப்பியசிக்க வேண்டுமோ அவ்வளவில் அவ்விதம் நாம் செய்யவேண்டும். மேலும் நமது கல்வி தொழில் நாகரீகம் முதலியவைகளில் காணப்பெறும் குற்றங்களை ஆங்காங்கு ஆய்ந்து கண்டு அவைகளைத் திருத்திக் கொள்ளவும் நம்மவருக்குப் பிறதேசத்தவரால் ஏற்பட்டிருக்கும் நன்மை மேன்மைகளை ஒப்புக் கொண்டு அவர்கள் பால் நமது கடமைப் பாட்டையும் சிநேகத்தையும் காட்டவும் ஆசைப்பட வேண்டும். நமது நாகரீகமே சிறந்ததெனவும், பிறதேசத்தார் நம்மைவிட தாழ்ந்த லக்ஷியங்களையும் நாகரீகத்தையும் உடையவரெனவும் இறுமாந்திருத்தல் கூடாது.

ஆகவே, நமது தேசியவுணர்ச்சியும் தேசாபிமானமும் வளரச் செய்கையில் பிறதேசத்தாரிடம் நாம் நமது அபிமானத்தையும் நன்கு மதிப்பையும் வெகுவாய்க் காட்டி அவர்களிடமிருந்து அத்தகைய பேறுகளை நாமும் அடைந்து ஆனந்தமுறல் வேண்டும். இந்திய சரித்திரம் போதிக்கும் நமது உபாத்தியாயர்கள் இத்தகைய கோட்பாடுகளை மனத்திலிருத்தி தக்கவாறு நமது நாட்டிற்கும், உள்ளன்பைதத்துவமாய்க் கொண்ட பலதேசத்தாரின் ஐக்கியத்திற்கும் பாடுபடுவாராக. (தொடரும்)

## வேதாந்த சாத்திரவிசார சங்கிரக வினாவிடை

### (இராமகிருஷ்ண சம்பாஷணை.)

---

இராமன்:—அண்ணே! எங்கே வெகுநாளாகக் காணோம்.

கிருஷ்ணன்:—வேதாந்த சாத்திர விசாரம் செய்வதனால் இங்கே வருவதற்கு எனக்கு அவகாசம் நேரிடவில்லை.

இரா:—வேதாந்த சாத்திர விசாரத்தால் நீ அறிந்து கொண்டதென்ன.

கிரு:—'சர்வம் மித்தை சர்வம் பிரஹ்மம், சர்வம் நான்' என்பதே.

இரா:—நீ அறிந்து கொண்டது எனக்கு ஆச்சரியமாயிருக்கின்றது. அதனை யானறிந்து கொள்ளும்படி கூறல் வேண்டும்.

கிரு:—அது, வேதாந்த சாத்திரார்த்த விசாரணையைச் செவ்வையாகச் செய்தால் விளங்கும்; அப்போது அவ்விஷயம் ஆச்சரியமாகத் தோன்றும்.

இரா:—அப்படியே கேட்கிறேன்; நீ விடை கூறுகின்றாயா?

கிரு:—கூறுகின்றேன்; கேள்.

இரா:—வேதம் என்றாலென்ன?

கிரு:—பிரத்தியட்சப் பிரமாணத்தாலும் அனுமானப் பிரமாணத்தாலும் அறிதற்கரிய விஷயங்களை எது அறிவிக்கின்றதோ அது வேதமாம்.

இரா:—அவ்விஷயங்களெவை?

கிரு:—புண்ணியம் பாவம், சுவர்க்கம் நரகம், முதலியனவாம்.

இரா:—வேதாந்த மென்றாலென்ன?

கிரு:—வேதத்தின் அந்தம் வேதாந்தமாம். அது உபநிஷத்தென்று சொல்லப்படும்.

இரா:—வேதாந்த சாத்திர மென்றாலென்ன?

கிரு:—வேதாந்த மென்னும் உபநிஷத்துக்களின் அர்த்தங்களை நம்மனோர் அறியுமாறு சுருக்கமாகவும் பெருக்கமாகவும் கூறும் நூல்கள் வேதாந்த சாத்திரங்களாம். அவை ஞானவாசிட்டம், பகவத்கீதை, கைவல்லிய நவநீதம், வாசுதேவமனனம், பஞ்சதசி, விவேக சூடாமணி, வேதாந்த சூடாமணி முதலியனவாம்.

இரா:—விசாரணை யென்றாலென்ன?

கிரு:—ஜீவாத்மசொரூபத்தையும், பரமாத்ம சொரூபத்தையும், மாயாப் பிரபஞ்ச விபவசார சொரூபத்தையும் நல்லாசிரியர் வாயிலாக, மேற்கண்ட நூல்களுள் யாதாவதொன்றைப் படிப்பது வாயிலாக ஆராய்ந்தறிதலாம். அவற்றைச் செவ்வையாக ஆராய்ந்தறிந்தால், 'சர்வம் மித்தை, சர்வம் பிரஹ்மம், சர்வம் நான்' என்னும் உண்மை சந்தேக விபரீதமில்லாமல் விளங்கும்.

இரா:—வேதாந்த சாத்திர விசாரம் செய்வது மிகவும் அருமை யென்றுணர்கின்றேன்; நான் அதனை எளிதாக வுணர்தற்குரிய சாதனங்களை எனக்கு விளக்கமாகக் கூறல் வேண்டும்.

கிரு:—மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை என்னும் குணங்களை நீ சம்பாதித்துக் கொள்வாயாயின், உனக்கு வேதாந்த சாத்திர விசாரம் செய்வது மிகவும் பிரியமாகத் தோன்றும்.

## (இராமகிருஷ்ண சம்பாஷணை.)

இரா:—மைத்திரி யென்றாலென்ன?

கிரு:—நம்மனோரெல்லாரும் ஒரு கடவுளின் மக்களென்றும், நமக்குள் மேல் கீழ் என்னும் வேற்றுமை உண்மையிலில்லை யென்றும், நாம் அனுபவித்தற்குரிய பொருள்கள் இருக்கும் இடம் யாவருக்கும் உரியதென்றும் கருதி, எவரோடும் பகைக்குங் குணமின்றி நட்பாயொழுகுதலாம். இந்நட்பு பெருகுந்தோறும் இதமாயும் மிதமாயும் வஞ்சனை கலவாதாயுமுள்ள சொற்களைக் கூறுதல் பெருகி வருவதாம்.

இரா:—கருணையாவ தென்ன?

கிரு:—கஷ்டப்படும் பிராணிகளைக் கண்டவிடத்து மனமிரங்கி அவற்றை அக்கஷ்டத்தினின்றும் நீக்க உண்டாகும் முயற்சி. இது அருள் என்றும், தயை என்றும், இரக்கமென்றும் சொல்லப்படும்.

இரா:—இதனை இன்னும் விளக்கமாகக் கூறல்வேண்டும்

கிரு:—இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுவது அநாவசியம். உனக்கு ஒரு கஷ்டம் வந்த காலத்தில் பிறருடைய உதவியை நீ எதிர்பார்க்கின்றாயல்லவா? அவ்வுதவியைப் பிறர் நீ எதிர்பாராமலே செய்வாராயின், அவரை என்னவென்று கூறுவாய்? மகா கருணையுடையவரென்றல்லவா கூறுவாய்? உயர்திணைப் பொருள்களுள் எவராவது, அஃறிணைப் பொருள்களுள் எதுவாவது கஷ்டமடைந்துள்ள காலத்து, நீ விரைந்து சென்று அக்கஷ்டத்தை வேண்டுகோளின்றியே நீக்குவாயாயின், நீயும் கருணையுடையவனாவாய். உன் பெயருடைய இராமன் இராவணனோடு முதல் நாள் யுத்தம் செய்தகாலத்தில் அவன் தோற்று ஆலம் விழுதுகளைப்போலக் கைகளைத் தொங்கவிட்டுத் தலை சாய்ந்து நின்றபோது அவனது நிலைமையைக் கண்டிரங்கி "இன்று போய் பொரற்கு நாளை வா" என விட்டமையை நீ கூர்ந்து நோக்குவாயாயின், கருணையென்பது பகைவர் மாட்டும் இன்றியமையாது செய்யத்தக்க தென்பது உனக்கு நன்கு விளங்குவதாம்.

இன்னமொன்று சொல்லுகிறேன்; நீ கவனமாகக் கேள். மாமிசமுண்பவர்க்கு கருணை யென்பது உண்டாவதில்லையாம்; உண்டாகுமாயின், அது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது போல்வதாம். மாமிசம் பிணவடிவமாயும் ரணவடிவமாயும் விஷவடிவமாயும் இருத்தலை யறியாது அதனை உண்பவர் மனம் பிராணிகளிடத்துத் தயை பாராட்டுவதில்லையாம்; பிராணிகளை வருத்துவதிலேயே நோக்கமுடையதாகவே யிருப்பதாம். அதனால் கருணையை யடைய விரும்புகின்றவர் மாமிச முண்டலைப் பிரயத்தன பூர்வகமாய்

விட்டொழிக்க முயலுதல் வேண்டும். "ஊனுண் பாரின் உளத்தெளியாது" என்பது ஒரு பிரசித்த பழமொழியாம்.

இரா:—முதிதை யாவதென்ன?

கிரு:—மைத்திரி யென்னும் குணத்தையும் கருணை யென்னும் குணத்தையு முடையாரைக் கண்ட விடத்து, 'ஆ! ஆ!! இவர் செய்த புண்ணியம், எத்தன்மையதோ! இவரைக் காணும் பாக்கியம் நமக்கு கிடைத்ததே' யென்று மகிழ்ச்சி யடைதலாம்.

இரா:—உபேட்சை யாவதென்ன?

கிரு:—ஒருவர் புகழ்ந்து கூறும்போது மகிழ்ச்சியும் மற்றொருவர் இகழ்ந்து பேசும்போது வாட்டமுமடையாதிருத்தலாம். இந்த நான்கு குணமும் உனக்குப் பரமேசுவரனது கருணையினாலே கிடைக்குமாயின், நீ வேதாந்த சாத்திர விசாரத்திற்குத் தகுதியுடையவனாய்ச் 'சர்வம்மித்தை, சர்வம்பிரஹ்மம், சர்வம் நான்' என்னும் சித்தாந்தத்தைச் சந்தேக விபரீதமில்லாதுணர்ந்து ஜீவன் முத்தனாதற் குரியவனாவாய். ஜீவன்முத்தனுக்கு ஜன்மமின்றென்பது வேதமுரசாம். நீ அடிக்கடி,

"ஈனமிலாச் சமாதியினி லிருமை யின்றி
யேகபரி பூரணமா யிருப்போனாகி

யூனமிலாச் சமாதிபிரிந் திருக்குங் காலை
யுலகத்தி லுதாசீன விருத்தி மேவி

மானமவ மானமுத லெவையு மின்றி
மைத்திரியே முதலான குணநிறைந்து

தீனமிலாக்கம்பீர சுபாவ மாகித்
திகழ்சீவன் முத்தனுநா னேனேயா." (ரிபுகீதை)

இச்செய்யுளைச் சிந்தனைக்குக் கொண்டு வருவாயாயின், வேதாந்த சாத்திர விசாரத்தின் பயனை எளிதிற் பெறுதற்குரிய வனாவாய்.

(இன்னும் வரும்)

(சென்னை இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்,
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய)

கோ. வடிவேல் செட்டியார்.

## கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள்

## *(Benefits of Co-operation)*

---

ஒற்றுமையால் மிகுந்த பலனுண்டு என்னும் விஷயத்தை நாம் பாலியத்திலேயே புத்தகங்களிலுள்ள கதைகளின் மூலமாய் படித்திருக்கிறோம். ஆனால் மேல் நாடுகளில் சுமார் எழுபது வருஷகாலமாயும், நம் இந்தியாவில் இருபது வருஷகாலமாயும் நடைபெற்று வரும் கூட்டுறவு இயக்கத்தினால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளைப் பற்றி, விவரமாய் அநேகர் அறிந்திருக்க மாட்டார்கள் என்னும் எண்ணத்தினால் இந்த வியாசம் எழுத நேர்ந்தது. யாவருக்கும் மிகுந்த நன்மையை யுண்டாக்கும் இவ்விஷயத்தை, ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசிய மாகையால், கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி இச்சஞ்சிகையில் பிரதி மாதமும் தொடர்ச்சியாய் ஒரு வியாசம் எழுதிவர விரும்புகின்றோம்.

தரித்திரம் என்னும் பீடையை அதி சுல மாயும் கௌரவமாயும் நீக்கத்தக்கது கூட்டுறவு தவிர வேறொன்றும் இல்லையென்று உறுதியாய்ச் சொல்லலாம். எளிய வியவசாயிகளுக்கும் தொழிலாளர் களுக்கும் கூலியாட்களுக்கும் மற்றுமுள்ள ஏழைகளுக்கும், நியாயமாயும் இலாபகர மாயுமுள்ள வட்டிக்குப் பணம் கடனாகக் கிடைப்பது அசாத்தியம். பணக்காரர்கள்தான் பணம் பெறலாம். அவர்களுக்கு பாங்கிகளிலிருந்து சொற்ப வட்டிக்குப் பணம் எளிதாய் கிடைக்கிறது. ஆனால் மேற்கூறிய எளியஜனங்களுக்கு அத்தகைய பாங்கிகளிலிருந்து கடன் கிடைப்பது அசாத்தியம். அவர்களுக்குத் தேவையான தொகையோ சொற்பந்தான். அந்த சொற்ப கடனுக்கு அவர்கள் மார்வாடிகளிடத்திலோ அல்லது மற்ற சில்லரை வியாபாரிகளிடத்திலோ அதிக வட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள் என்கிற சங்கதி எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்விதமாக ஏழை ஜனங்கள் பேராசைப்பேய் பிடித்தலையும் சொற்ப வியாபாரிகளால் விலங்கு போடப்பட்டவர்களாய், அவ்விலங்கிலிருந்து ஜீவ பரியந்தம் விடுவித்துக் கொள்ளுவதற்கு முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். தவிர, அவர்களுக்குப் பிற்காலத்தில் அவர்களின் சந்ததிகளும் அவ்வாறே கஷ்டமடைகிறார்கள். இந்த நிலைமை எல்லாத் தேசங்களிலு மிருக்கிறது. ஆனால் நம்தேசத்தில் சற்று அதிக மென்று சொல்லலாம். இந்த நிலைமையிலிருந்து ஏழைகளைக் காப்பாற்ற சிலதேசங்களில் பெரிய பிரபுக்கள் தர்மகாரியமான பலவித ஏற்பாடுகள் செய்தார்கள். அவ்வேற்பாடுகள் பயன்படவில்லை. ஏழைகளுக்குத் தருமம் செய்வதினால் அவர்கள் எப்போதும் அவ்வித தருமத்தையே யெதிர்பார்க்குந் தன்மையுடையவர்களாகின்றார்களேயன்றி, தம் சொந்த முயற்சியால் முன்னுக்கு

வரவேண்டுமென்னும் எண்ணமில்லாதவர்களாகின்றார்கள். ஆகையால் அத்தரும வுதவி அவர்களுக்குத் தற்கால சாந்தியாவதேயன்றி நீடித்த பலன் தருவதில்லை. நீடித்த சாந்தி பெறுவதற்கு கூட்டுறவு முறை ஒன்றுதான் தக்க ஔஷதமாம்.

---

ஆங்காங்கு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பதினால் எளிய விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் கூலிக்காரர்களுக்கும், நியாயமான கடன் நியாயமான வட்டிக்கு சுலபமாய் கிடைக்கிறது. அம்மாதிரி சங்கங்கள் அவர்களுக்குச் சொந்தமாய் அவர்கள் கிராமங்களிலேயேயிருப்பதால் அவர்கள் கௌரவத்துடன் கடன் வாங்க சாத்தியமாகிறது. இம்மாதிரி ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுமிடங்களில் பேராசை பிடித்த சௌகார்களுக்கு லேவாதேவி குறைந்து போகிறது. பணம் கொடுத்து வாங்குவதே அவர்கள் தொழிலாயிருப்பதால் அவர்கள் வட்டியைக் குறைக்கும்படி நேரிடுகிறது. பல ஊர்களில் முக்கியமாய் பஞ்சாப் தேசத்தில் சௌகார்கள் கூட்டுறவு சங்கங்களோடு போட்டிபோட்டு வட்டியைக் குறைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் கூட்டுறவு இயக்கம் எங்கும் பரவும் பக்ஷத்தில் நியாயமான வட்டிக்கு எல்லோருக்கும் பணம் கிடைப்பது சுலபமாகும்.

ஏழைகள் இவ்வாறு பணக் கடனுக்காக கஷ்டப்படுவது மாத்திரமன்றி, சில்லரை வியாபாரிகளிடத்தில் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் மற்றும் சில்லரைப் பொருள்களையும் கடனாக வாங்குவதனால், அளவிலும் விலையிலும் அபாரமான நஷ்டமடைகிறார்கள். இக்கஷ்டத்தை நீக்கவும் கூட்டுறவு சங்கங்கள் உதவி புரிகின்றன. எப்படியெனில், அச்சங்களில் மெம்பர்களாகச் சேர்ந்திருப்பவர்களுக்குத் தேவையான சாமான்களை, மொத்தமாக ரொக்க விலைக்கு யோக்கியரான வியாபாரிகளிடமிருந்து சரசு விலைக்கு வாங்கி, ஒவ்வொரு மெம்பருக்கும் பங்கிட்டுக் கொடுக்கின்றன. இவ்வாறு செய்வதில் ஜெர்மனி, ஐர்லாந்து தேசங்களில் மிகுந்த லாபம் கிடைத்திருப்பதாக அனுபவத்தில் தெரிகிறது. நம் தேசத்திலும் பலவிடங்களில் இவ்வாறு செய்து வருகிறார்கள்; தக்க சௌகரியங்களிருக்குமிடத்தில் கூட்டுறவு பண்டசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

விவசாயிகள் அறுவடை காலத்தில் சர்க்கார் கிஸ்திக்காகவும் பழைய கடன்களுக்காகவும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் மாசூலை குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. அதனால் அவர்கள் மிகவும் நஷ்டமடைகிறார்கள். ஆனால் அவர்கள் கூட்டுறவு சங்கங்களில் மெம்பர்களாயிருந்தால், மேற்சொன்ன செலவுகளுக்காக வேண்டிய பணத்தை சங்கங்களில் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். மாசூலை நல்லவிலை கிடைக்கும் பரியந்தம் கையிருப்பில் வைத்திருந்து, பிற்பாடு விற்று நல்ல லாபமடையலாம். தவிர, பல

## (Benefits of Co-operation)

மெம்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து தாங்கள் விற்கவேண்டிய மாகுல்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து பெரிய வியாபாரிகளுக்குத் தக்கவிலையில் விற்கலாம் இதிலும் லாபமுண்டு.

நம் தேசத்தில் தற்போதுள்ள விவசாயத்தின் நிலைமை சிலாகிக்கத் தக்கதாயில்லை. அநேகபல விதங்களிலும் சீர்திருத்த மடைய வேண்டியதாயிருக்கிறது. இதற்காக சீர்திருத்த விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் எவ்வளவோ முயற்சியெடுத்துக் கொள்ளுகின்றார்கள். ஆயினும், இவ்வுத்தியோகஸ்தர்கள் லக்ஷக்கணக்காயிருக்கும் விவசாயிகளைத் தனித்தனியாகக் கண்டுபேசி, சீர்திருத்தல்களை ஏற்படுத்துவது அசாத்தியம். ஆனால், இவர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாய்த் தங்கள் வேலையைச் செய்வதினால் அநேக விவசாயிகள் அனுகூலமடைகின்றனர். விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள், சங்கங்களின் மஹாசபைகளில் போய் பிரசங்கம் செய்வதினாலும், சங்கங்களின் மூலமாக நூதனமான கலப்பை முதலிய விவசாயக் கருவிகளையும், உரங்களையும், நல்லவிதைகளையும் சப்ளை செய்வதினாலும், விவசாயத்தை அபிவிருத்திசெய்ய அனுகூலமாகிறது, அவரவர் தனித்தனியாக வாங்குவதற்கு அசாத்தியமாயிருக்கும். விலையுயர்ந்த எந்திரங்களை மேற்படி சங்கங்கள் வாங்கி மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுவதுமுண்டு.

இவ்விதமாகப் பொருளுதவி செய்வது மாத்திரமல்ல; சன்மார்க்கம் பரவும்படி செய்வதுதான் இச்சங்கங்களின் முக்கிய கடமை மெம்பர்கள் தங்கள் அபிவிருத்தியைக்கோரி சங்கம்ஏற்படுத்துவதினாலும், நன்னடக்கையுள்ளவர்களையே சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்ப்பதினாலும் அவர்களுக்குள் சகோதரத்வம் உண்டாகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாக உண்மையில் நடந்த ஒருசம்பவத்தைச் சொல்லுகிறோம். சிலவருஷங்களுக்கு முன் நடந்த மகாயுத்தத்தில் பெல்ஜியத்தைச் சேர்ந்த ஓர் கிராமத்தில் ஜெர்மன் சேனைகள் பிரவேசித்தன. அந்த ஊரில் ஓர் கூட்டுறவு பண்டசாலையிருந்தது. ஜெர்மன் படையைச் சேர்ந்த சிலர் அதற்குள் நுழைந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு கிரயம் கொடுத்துவிட்டுத் திரும்பிப்போனார்கள். இது, அந்த சாலைமானேஜருக்கு அதியாச்சரியமாயிருந்தது. எதைக்கண்டாலும் அழித்துச் செல்லும் ஜெர்மன் சைன்னியங்கள் விலைகொடுத்து சாமான்வாங்குவது ஆச்சரியமல்லவா? துருப்புகள்யாவும் போனபிறகு, அப்பண்டசாலையின் மானேஜர்களில் ஒருவர் வெளியேவந்தார். அங்கே அப்பண்டசாலையின் பெயர் எழுதியுள்ள பலகையில் "இவர்கள் நமது கூட்டுறவு சகோதரர்கள். இவர்களுக்கு யாதொரு துரோகமும் செய்யாதே" என்று ஜெர்மன் பாஷையில் எழுதியிருந்ததாம்.

கூட்டுறவு சங்கங்களில் சேரும் மெம்பர்கள் நாணயமானவர்களா யிருக்கவேண்டிய தவசியம். அதனால் நன்னடக்கை, சிக்கனம், சத்தியம், ஆத்மநியமனம், ஆத்மபரித்தியாகம் மனோரம்மியம் முதலானவைகளும் ஏற்படுகின்றன. சோம்பேறியாயிருப்பவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களாகி றார்கள்; ஊதாரிகள் சிக்கனமுள்ளவர்களாகிறார்கள்; குடி, சூது முதலிய தீயொழுக்கங்கள் நாளுக்குநாள் குறைந்து கொண்டேவந்து கூடியசீக்கிரத்தில் அற்றுப்போய்விடும்; கல்வியில்லாதவர்கள் கற்கவிரும்புவார்கள்.

மேற்கூறியவாறு பலநன்மைகளைத்தரும் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்வதுடன் ஒவ்வொருவரும் அவ்வியக்கத்தில் ஈடுபட்டு ஜனசமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக கஷ்டப்பட்டு வேலை செய்வதைவிட சிலாக்கியமான விருத்தி ஒன்றுமேயில்லை யென்று சொல்லலாம். (தொடரும்.)

S. துரைசாமி ஐயர் பி. ஏ.,

ராணிப்பேட்டை.

## தொற்றுவியாதிகள்.

வியாதியானது ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் தொற்றிக் கொள்ளல் அல்லது பற்றிக்கொள்ளுந் தன்மையால் தொற்றுவியாதியென வழங்குகிறது.

அம்மை, காலரா எனவழங்கும் விஷபேதி அல்லது வாந்திபேதி, குஷ்டம், குளிர்காய்ச்சல், ஜலதோஷம் முதலிய வியாதிகள் தொற்று வியாதிகளெனச் சொல்லப்படுகின்றன.

அம்மை, வாந்திபேதி முதலியவைகள் மிக்கதுரிதமாக வந்து, மிக்கவேகத்துடனே ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரவுவதை அனுபவபூர்வமாக அறிகிறோம். மற்றுஞ்சிலவியாதிகள் இவ்வளவு துரிதத்துடனல்லாது சமீபத்திலுள்ள அனைவரிடமும் தொற்றாமல் சிலரிடம் மட்டும் பற்றிக் கொள்ளுந் தன்மையுடையவகளாயிருக்கின்றன. ஒருவீட்டில் குஷ்டமாவது கூடியவியாதியாவது ஒருவருக்கு உண்டாயிருந்தால் அவ்வீட்டிலுள்ள அனைவரும் அவ்வியாதியால் பீடிக்கப்படுவதாகத் தெரியவில்லை. இவ்விதம் ஒருவியாதி ஒருவரிடமிருந்து வேறு சிலரிடம் தொற்றாமலிருப்பதைக் கண்டு அவற்றிறகு ஒட்டுந்தன்மை உண்டோ இல்லையோ என்று சிலர் சமுசயிக்கக்கூடும்; இதன் காரணத்தைப் பிறகு விளக்குவோம். சிலவியாதிகள் தொற்றிக்கொண்ட வுடனேயும், சில, பலமாதங்களுக்குப் பிறகும்

அவற்றின் குணங்குறிகளைக் காட்டுவதால் இன்னின்னவை தொற்றுவியாதிகளென்று ஜனங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குக் கூடாரமலிருக்கின்றது.

'வித்தில்லாச் சம்பிர்தாயம் மேலுமில்லை கீழுமில்லை' என்றுசொல்வதற்கேற்ப தொற்று வியாதிகளுக்கும் வித்துக்களுண்டு. பலவிதமான விதைகளைப் பூமியில் நட்டபோதிலும் விதைகளுக்கேற்றபடி முளைக்குங்காலமும் வித்தியாசப்படுகின்றது. அவ்விதமே தொற்று வியாதி வித்துக்கள் நமது சரீரத்தினுள் பிரவேசித்த பிறகு அவ்வவற்றின் குணகுணங்களுக்கேற்ப அவ்வவ்வியாதிகள் வெளிப்படுங்காலமும் வெவ்வேறு விதமாக வித்தியாசப்படும்.

கத்தரிவிதையை நட்டால் அவரைக்காய் காய்க்காமல் கத்தரிக்காயே காய்ப்பதுபோல் தொற்றுவியாதிகளும் வித்துகளின் மூலமாய் விருத்தியடைகின்றன. ஒரு வியாதியை யுண்டாக்கும் வித்தானது ஒரு நோயாளியிடம் வளர்ந்து எதோ ஒருவகையில் மற்றொருவருடைய தேகத்தில் சம்பந்தித்து வளரத்தொடங்கி மீண்டும் அதேவியாதியை யுண்டாக்கும். அதாவது வாந்திபேதி ரோகத்தால் வருந்தும் மனிதனுடைய தேகத்திலிருந்துண்டான வித்துகள் மற்றொரு மனிதனுடைய தேகத்தில் சம்பந்தித்து அந்த வியாதியையே உண்டுபண்ணுவ மல்லாது அம்மையை உண்டுபண்ணாது.

தொற்றுவியாதிகளை உண்டுபண்ணும் வித்துகள் மிகவும் நுண்ணியவைகளானதால் அவற்றின் மூலமாய் உண்டாகும் வியாதிகளை யெல்லாம் தொற்றுவியாதிகளென்று சொல்லவேண்டும். இந்த நுண்ணுயிர்கள் சாமானியமாய் நமது சரீரத்தின்மேலும் நமது வீட்டினுள்ளும் வெளியிலும், நமது குடலுக்குள்ளேயும், நாம் சுவாசிக்கும் காற்றிலும், நாம் பருகும் ஜலத்திலும், பொதுவாக எந்த விடத்தில் அசுத்தமும் அழுகின பதார்த்த வகைகளும் இருக்கின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் அளவின்றி மிகச் செழித்து வளரும். சூட்சும தரிசனக் கண்ணாடி அல்லது மிகச் சிறிய வஸ்துக்களையும் எளிதில் பார்க்கக் கூடிய சக்தியிருக்குமானால், எவ்வளவு நிர்மலமான பொருளை நாம் பார்த்தபோதிலும் அப்பொருளிலும் அழுக்கு நிரம்பி கிடப்பதாக எண்ணி எறிந்துவிடுவோம். நுண்ணுயிர்களையும் பார்க்கக்கூடிய சக்தியிருக்குமானால் எவ்விடத்தைச் சோதித்தபோதிலும் அசுத்தமான பிரதேசங்களில் மிகச் சூக்ஷ்மமான ஜீவராசிகள் வியாபித்திருப்பதாக அறியப்படும். மேற்கூறிய ஜீவராசிகளில் சில ஜாதிகள் மனிதனைப் போலவே பிராணவாயு வியாபித்திராத விடங்களில் ஜீவித்திருக்கமாட்டா. இவற்றுள் சில, உயிருடன்கூடிய அவயவங்களையே தின்று பிழைக்கும் இயல்புடையன. மற்றுஞ்சில, முற்றிலும் நசித்துப்போய் அழுகிப் பதன் கெட்ட அவயவங்களையும் தின்றுவரும். மேற்கூறிய இரண்டு வித ஜீவ இனங்களும் செய்கையால் ஜந்துக்களின் தன்மையுடையவகளாயிருப்பதால்

இவற்றிற்கு சூக்ஷ்ம ஜந்துக்கள் (Protosoa) எனப் பெயர் வழங்கும். இந்த இனத்தைச் சேர்ந்தவை இதர ஜந்துக்களை அல்லது ஜந்துக்களின் அவயவங்களையே உணவாகக் கொள்ளுகின்றன. வேறு சில, உயிருடனிருக்கும் ஜந்துக்களையேனும் விருக்ஷ ஜாதிகளையேனும் தின்னச் சக்தியற்று அழுக்கடைந்தவையும் அழுகிப்போனவையுமான வஸ்துக்களையே ஆகாரமாகக் கொள்ளுகின்றன. இவை காளான் என்னும் இனத்தைச் சேர்ந்தவை.

(இன்னும் வரும்)

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்,

இராணிப்பேட்டை.

## புருஷார்த்தம்.

---

சச்சிதா னந்த சற்குரு வீணையடி
உச்சித மாக நச்சிகின் றேத்து தும்
புருடார்த்த மெனும் பொருள் விரித்தற்கே.

புருடார்த்த மெனினும் மக்கட் பேறெனினும் ஒக்கும். "மக்கட் பேறு" என்பதை ஈண்டு மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகக் கொள்க புரியில் (உடலில்) இருப்பதால் சீவன் புருஷனெனப்படும். அர்த்திக்கப்படுவது (விரும்பப்படுவது அல்லது அடையத்தகுவது) அர்த்தமாம். ஆகவே உடலிலிருக்குஞ் சீவன் விரும்பி அடையத் தகும் பொருள் புருடார்த்தமாம். எழுவகைப் பிறப்பில் தேவவுடல் நல்வினைப்பயனை நுகர்தற்பொருட்டும், விலங்கு-புள்-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம் ஆகிய ஐவகையுடல் தீவினைப் பயனை நுகர்தற் பொருட்டும் இறைவனாலருளப் படுவனவென்பது நூற்களின்றுணிபாம். இருவினைப்பயனையும் நுகர்தற்கிடனாய மக்களுடம்பினைப் பெற்ற ஜீவர்களே புருடார்த்தத்தை அடையும் பொருட்டு முயலுதற்குரியர். ஆதலின் புருடார்த்தத்தை மக்கட்பேறு என்றும். இனி ஔவையாரவர்கள் இதனை "உருவத்தாலாயபயன்" என்றும், "உடம்பினைப் பெற்றபயன்" என்றும் வழங்குவர்.

புருடார்த்தம் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தென்பதை.

தருமம் பொருள்காமம் வீடென்னு நான்கும்
உருவத்தா லாய பயன்

என்னும் ஔவை வகுறள் கொண்டுணர்க. இவற்றுள் அறம் வீட்டுக்கும், பொருள் இன்பத்திற்கும் சாதனமாம். அன்றியும் அறம் இன்பத்தையும் பொருள் அறத்தையும் வளர்த்தலும் உண்டு.

ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

என்னும் ஔவையார் வெண்பா அறமுதலிய நான்கனியல்புகளை நன்கு விளக்கும். இனி இவற்றைத் தனித்தனி ஆராய்வாம்.

## 1. அறம்

அறம் என்னும் சொல் அம் விகுதிபெற்ற தொழிற்பெயராம். அது தொழிலாகுபெயராய் மநு முதலிய நூல்களில் செய்யத் தக்கனவிவை செய்யத் தகாதனவிவையென வரையறுக்கப்பட்ட விஷயங்களை யுணர்த்தும். தருமம் என்னும் வடசொல்லுக்குத் தரிப்பது (தாங்குவது) என்பது பொருள். ஒருவன் அறநூல்களுக்குக் கட்டுப்பட்டும் ஆன்றோரொழுக்கத்தை அநுசரித்தும் நடவானாயின் அவன் வாழ்க்கை சீர்கேடடைந்து தாழுமாதலின், அவன் பல கஷ்டங்களை யநுபவித்து அழிவெய்துவன். அங்ஙனம் அழிவெய்தாது அவனைத் தாங்குவது அறமாதலின் அது தருமமெனப்பட்டது.

இளையோரெளிதிலுணரும் பொருட்டு "ஈதலறம்" என்று ஔவையார் கூறினராயினும், ஈதல் முதலிய பல விகித கர்மங்களின் கூட்டம் அறமாம் எனக்கொள்க. விகித கர்மங்களாவன "மெய் பேசுக" என்றற்றொடக்கத்துக் கட்டளைவாக்கியங்களால் வேதத்திலும் தர்மசாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்ட கர்மங்களாம். அக்கட்டளை வாக்கியங்களனைத்தையும் படித்தோ கேட்டோ உணர்தல் சிலர்க்கே யமையுமாதலின் அறத்தினியல்பைச் சுருக்கச் சொல்லி விளங்கவைக்க வந்த தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்: "மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன் (ஒருவன் மனத்தில் குற்றமில்லாதவன் ஆகக்கடவன்; அவ்வளவே அறமாவது)" என்றார். மனத்துக்கண் உளவாம் குற்றங்கள் ஆசை, கோபம், பொறாமை முதலியனவாம். இவற்றையும் இவை காரணமாக நிகழும் பொய், கடுஞ்சொல் முதலிய வாக்குக் குற்றங்களையும், கொலை-களவு-கள்ளுண்ணல்-சூதாடல்-பிறனில் விழைதல். முதலிய காயக்குற்றங்களையும் நீக்கி நின்று ஒருவன் செய்யும் நற்காரியங்களெல்லாம் அறமாமென்பதுணர்த்துவான் வேண்டி அவர்:

அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொ லூன்கும்
இழுக்கா வியன்ற தறம்

என்றார். இந்நெறி நின்றோன் தரும சுவரூபியாம். அவன் பேச்செல்லாம் தருமோபதேசமாம். அவன் செய்வனவெல்லாம் அறச்செயல்களாம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், "ஆன்மாவை நாசம் செய்வனவாயும் நரகவாயில்களாயும் இருப்பன. காமம், குரோதம், லோபம் ஆகிய மூன்றுமாம். அவற்றை விட்டொழி" (கீதை 16 அத். 21 சு) என்று கூறிப்போந்தனர்.

இக்குற்றங்களைத் தன்னிடத்தினின்று களைய முயலாதான் அறச்செயல் பல புரிய நினைத்தாலும் அவற்றைக் கடைப்போகச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனுக்குண்டாதலரிது. கன்னனது தானத்தால் அவனுக்குண்டாம் புகழைக்கண்டு பொறாமையுற்ற தூரியன் தானும் அவனைப்போல் தானம் செய்யவாரம்பித்தனன். இவ்விருவர் தானத்தின் தாரதம்மியத்தை விளக்குவான் விரும்பிய கிருஷ்ணர் ஒருமறையோன் வடிவங்கொண்டு தூரியனையண்மி "அரச! சின்னாட்களில் என் தந்தையின் சிரார்த்த தினமுறுகின்றது. பலபொருள்களும் சேகரித்துவிட்டேன். எரிக்கும்புவேண்டித் தங்களை யடைந்தேன்" என, தூரியன் அங்ஙனமே அந்நாளில் அளிப்பதாக வாக்களித்தனன். கிருஷ்ணர் சங்கற்பத்தால் அன்று முதல் நிரம்பமழை பொழிந்தது. மேகவண்ணன் குறித்ததினத்தில் முன்னைய வேதியவடிவுடன் தூரியனையடுத்தபோது அவன் முகங்கடுத்து: "ஹே பிராஹ்மண! நினக்கென்ன பித்தோ? மழைசோரிகின்றதே! அவ்வளவு உலர்ந்த கட்டை எங்ஙகப்படும்?" என்றான். ஆயர்நேயன் கன்னனை யடுத்துத் தன்வரவு செ ன்னபோது அவன் அருகிலுள்ளதோர் கட்டடத்தைப் பிரித்து அதிலுள்ள கைமரம் முதலியவற்றை நனையாமல் பிராஹ்மணன் வீடுசேர்க்கும்படி ஏவலர்க்குப் பணித்தனன். இதுகேட்ட நாகக்கொடியோன் தருமகுணமில்லார் தருமமியற்றுதலியலாது என்பதுணர்ந்தனன் என்ப.

சிபிச்சக்கிரவர்த்தி ஒரு பறவையுயிரைக் காக்கும் பொருட்டு வேடனுக்குத் தன்னுடலையரிந்து கொடுத்தார். மநுநீதி சோழன் பசுக்கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர்க்காலி விடறினன். தன்மனைவியை அபகரித்த இராவணன் போர்க்களத்தில் இளைத்து நிற்றதுகண்டு "இன்றுபோய் நாளை வா" என்றுகருணை செய்தவர் இராமர். சத்தியத்துக்கு அரிச்சந்திரனும், பொறைக்குத் தருமனும், கொடைக்குக் கன்னனோடு குமணனும் உதாரணர் ஆனார்கள். கலைமகள் தந்த அக்ஷயபாத்திரம் கொண்டு இரப்போர்க்கிட்டுண்டு வந்த ஆபுத்திரன் இந்திரனது சாபத்தால் தான் பிறர்க்கு உணவளிக்க

இயலாதுபோக அதனால் உயிர் நீத்தான். உயிர்கள் துன்பங்கண்டிரங்கித் துறவு பூண்டார் புத்தர். ஒரு கன்னத்திலடித் தவனுக்கு மற்றொருகன்னத்தையும் காண்பி என் அறம் உரைத்து அரசாங்கத்தாரது அநியாயத்தை எதிர்த்து நிற்காமல் சிலுவையிலே தம் உயிர் நீத்தார் கிறிஸ்து. வண்டிமாட்டை அடித்தமை பொறாது வண்டியினின்றிழிந்து வண்டியேறின இடத்துக்கும் அங்கிருந்து தாம்போகவேண்டிய இடத்துக்கும் காலால் நடந்து சென்றார் மகாத்மாகாந்தி. அறம் புரிந்தோர் சரிதம் பல நம் புராண இதிகாசங்களிலிருத்தலின் அவற்றைப் படிக்குந்தோறும் நமக்கு தருமகுணம் வளரும். மதநூல்களும் அத்தன்மையன. தருமோபதேசம் செய்யாத மதம் உலகில் யாங்கணும் இல்லை என்க.

(தொடரும்)

ச. கந்தசாமி முதலியார்,

தமிழ்ப்பண்டிதர் சென்னை.

## நேயர்களுக்கோர் விண்ணப்பம்.

பத்திரிகாபிமானிகளாகிய நேயர்களே!

பல நண்பர்கள் தங்களுக்கு முதல் சஞ்சிகை கிடைத்ததும் தங்கள் சந்தாவை மணியார்டர் மூலமாக அனுப்பிவிடுவதாகவும், சிலர் முதல் சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பினால் பணம்செலுத்திப் பெற்றுக்கொள்வதாகவும் நமக்கு எழுதியிருக்கின்றனர். ஒரு ரூபாய்க்கு மணியார்டர் செலவு இரண்டணாவும், வி. பி. தபாற்செலவு ஐந்தணாவுமாகும். வி. பி. யில் அனுப்புவதால் அன்பர்களுக்கு மூன்றணா அதிகச்செலவாகுமென்பதை யுத்தேசித்து ஒருவருக்கும் வி. பி. யில் அனுப்பவில்லை. ஆகையால் அன்பர்கள் யாவரும் தங்கள் சந்தாத் தொகை ரூபா ஒன்றை மணியார்டர் மூலமாக உடனே அனுப்பி விடும்படி கோருகிறோம். தவறினால் அடுத்த சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பநேரும். தவிர,

நமது பத்திரிகைக்கு சந்தாதார்களின் ஆதரவைத்தவிர வேறு ஆதரவில்லாமையால் நேயர்கள் தங்களால் கூடியவரையில் முயற்சிசெய்து தங்கள் நண்பர்களையும் சந்தாதாரராகச்சேரச்செய்து ஆதரிக்கும்படி கோருகிறோம். அத்தகையோர் நன்றியை என்றும் மறவோம்.

எமது வேண்டுகோளுக்கிணங்கி உதவிசெய்த அன்பர்களின் பெயர்கள் வருமாறு:—

ஸ்ரீமான் A. வில்வநாத முதலியார், உரிகம்

„ K. G. முனிசாமி நாயுடுகாரு-கிருஷ்ணகிரி

„ வரதராஜுலு ரெட்டியார்-தண்டலம்.

„ நாராயணசாமி ரெட்டியார்-நாகவேடு.

„ கோதண்டபாணி முதலியார்-வெட்டுவாணம்.

சிரஞ்சீவி. புருஷோத்தமன் ⎫

„ P. V. ஞானகிராமன் ⎬ மாணவர்கள், ராணிப்பேட்டை

„ பக்தவத்ஸலன் ⎭

இவர்களுள் சிலர் 50, 60, பேருக்கு மேலும் சேர்த்திருக்கின்றனர்

இவர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனம் உரியது

மற்றும் சில நண்பர்கள் இவ்வாறு செய்வதாக வாக்களித்து முயன்று வருகின்றனர். அவர்களின் பெயர்கள் பின்னால் வெளியிடப்படும்.

பத்திராதிபர்.

## பெட்டிமனிதன்

### அல்லது

## வண்ணான் குறியால் வெளிப்பட்ட இரகசியம்.

### முதல்அத்தியாயம்

பல்வேறு ஜாதியினரும் வசிக்கும் சென்னையில் தங்கசாலை வீதியில் ஒரு நாள் காலை சுமார் 4-மணிக்கு ஓர் ஜட்கா வண்டி போய்க்கொண்டிருந்தது. அந்த வண்டிக்கு முன்னும் பின்னும் திரைகள் கட்டப்பட்டிருந்தன. பின்புறத்திரைக்குப் பின்னால் சுமார் நாற்பது வயதுள்ள மகம்மதிய ஸ்திரீயொருத்தி உட்கார்ந்திருந்தாள். அவளையும் வண்டிக்காரனையும் தவிர அவ்வண்டிக்குள் யாரிருப்பதும் புலப்படவில்லை.

இந்த வண்டி தங்கசாலை தபாலாபீசைச் சமீபிக்கையில் எதிரிலிருந்து சுமார் இருபத்திரண்டு வயதுள்ள ஓர் ஆடவன் 'சைகல்' எனவழங்கும்

துவிச்சக்கரவண்டியை வேகமாக விட்டுக்கொண்டு வந்தான். வந்தவன் அந்த வண்டியைக் கண்டதும் வண்டியை நிறுத்தும்படி வண்டியோட்டிருக்குச் சமிக்கை காட்டினான். வண்டிநின்றதும் அதன் பின்புறமாகச் சென்று அங்கிருந்த மகம்மதிய மாதிடம் இரகசியமாகச் சிலவார்த்தைகளைச் சொல்லிவிட்டு, வண்டியோட்டுபவனைப் பார்த்து நீ குதிரையை அதிகவேகமாக விடு, நான் நேற்றிரவு உனக்குச் சொன்ன தெருவின்பெயர் ஞாபகத்திலிருக்கிறதா? இரண்டு தென்னை மரங்களின் மத்தியிலுள்ள வீடுதான். தெரிகிறதா, சரி. தட்டிவிடு குதிரையை, குதிரைவண்டி குப்புசாமி என்பதைக் காட்டிக் கொள்ள இதுவே சமயம். இனி தாமதஞ் செய்யாதே; என்று சொல்லிவிட்டு முன்னிலும் மிகுந்த வேகமாய் இடதுகைப்புறமாகச் சென்றான். வண்டியும் அவன் பின்னால் மிக்க வேகமாக ஓடி மறைந்தது. குப்புசாமி வண்டி சென்ற கால்மணி நேரத்திற்குள் வேறொரு ஜட்காவண்டி அதிக அவசரத்துடன் ஓடி வந்து முன் சென்ற வண்டி நின்றிருந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் நான்குபாதைகள் கூடுமிடத்தில் நின்றுவிட்டது.

முன்சென்ற வண்டிக்கும் இவ்வண்டிக்கும் வித்தியாசம் இருப்பதாக எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம். முன்சென்ற வண்டி சத்தத்திற் கோடும் வண்டி. இது சொந்தசவாரி வண்டியென்று அதன் அமைப்பினாலும் மற்றுமுள்ள அலங்காரங்களாலும் விளங்கும். இந்த வண்டியை ஓட்டுபவர் கை விரல்களில் கற்கள் பதிக்கப்பெற்ற விலையுயர்ந்த மோதிரங்களும், கைகளில் கெட்டிக்காப்பும், சொலுசுப், நவீனமாக வலக்கையில் மாத்திரம் அணியும் 'செயின்' என்னும் ஒருவகைச் சங்கிலியும், கழுத்தில் பொன் உருத்திராக்ஷ மலர் கட்டப்பெற்ற பொற்சரடும், காதுகளில் வைரக்கடுக்கனும் அணிந்திருந்தார். இவருக்கு வயது சுமார் இருபத்தாறு இருக்கும். உடல் சற்றுபருத்தும் கறுத்தும் இருப்பினும் கம்பீரமான தோற்றமுள்ளவர். அவர் அணிந்திருந்த மேல்சட்டை மாறுகத்தரிக்கப் பட்டிருந்ததால் அவர்மிக்க அவசரத்துடன் வெளியே புறப்பட்டு விட்டாரெனத் தெரிகிறது.

(தொடரும்)

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்.

இராணிப்பேட்டை.

## CALANDAR FEBRUARY, MARCH 1925.

| | பிப்ரவரி | | | | | மார்ச் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு. | 1 | 8 | 15 | 22 | | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள். | 2 | 9 | 16 | 23 | | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ். | 3 | 10 | 17 | 24 | | 3 | 10 | 17 | 24 | 31 |
| புதன். | 4 | 11 | 18 | 25 | | 4 | 11 | 18 | 25 | |
| வியா. | 5 | 12 | 19 | 26 | | 5 | 12 | 19 | 26 | |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | | 6 | 13 | 20 | 27 | |
| சனி. | 7 | 14 | 21 | 28 | | 7 | 14 | 21 | 28 | |

### முக்கிய இந்து பண்டிகைகள்.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி | 2 | கிருத்திகை |
| ,, | 7 | தைபூசம் |
| ,, | 8 | பௌர்ணமி |
| ,, | 22 | அமாவாசை |
| மார்ச் | 1 | கிருத்திகை |
| ,, | 10 | பௌ. ஓவிபண்டி[கை |
| ,, | 24 | அமாவாசை [ப்பு |
| ,, | 26 | தெலுங்குவருடப்பிற |
| ,, | 29 | கிருத்திகை |

### இராகு காலம்,

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு—மாலை | 4-30 | மு | 6 | வரை |
| திங்கள்—காலை | 7-30 | ,, | 9 | ,, |
| செவ் —மாலை | 3 | ,, | 4-30 | ,, |
| புதன் —பகல் | 12 | ,, | 1-30 | ,, |
| வியா — ,, | 1-30 | ,, | 3 | ,, |
| வெள் —காலை | 10-30 | ,, | 12 | ,, |
| சனி — ,, | 9 | ,, | 10-30 | ,, |

* சித்திரைமீ முதல் முழுபஞ்சாங்கம் போடப்படும்.

Edited and Published by Pandit P. Srinivasulu Naidu,

Printed by K. Ponnaranga Mudaliar at 'Sri Krishna Press' Walajapet

# புத்தகவிளம்பரம்

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்-

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான்-கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யம் ... ரூ 8—0—0

கைவல்ய நவநீத வசன வினாவிடை

(ஷை யார் இயற்றியது) ... ...ரூ. 2—8—0

பகவத்கீதை வசனவினாவிடை ஷை ஷை ரூ 1--12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷையார் லோகோபகாரியில் எழுதியது... ... ... ... ... ரூ 0--12--0

விவேகாநந்தர் உபன்யாச ஞானத்திரட்டு ரூ 1—0—0

வியாசதாத்பர்ய நிர்ணயம்... ... ... ரூ 0--12—0

சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன் கூடியது) 0--12—0

விவேகசூடாமணி... ... ... ... ரூ 0--12—0

மநீஷாபஞ்சாகம் ... ... ... ... ரூ 0—5—0

மகாராஜா துறவு-வசனம் ...... ... ... ரூ 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ... ரூ

நாநாஜீவ வாதக்கட்டளை ரூ 0—4—0

ஷை (தெலுங்கு) தமிழ் படத்துடன் கூடியது ரூ 0—3—0

காரியசித்தியின் இரகசியம்... ... ... ரூ 0—5--0

வி. பி. சார்ஜ்-வேறு

"சன்மார்க்கபானு" ஆபீஸ்

ராணிப்பேட்டை (வ. ஆ.)

# "ஸ்ரீ கிருஷ்ண பிரஸ்,"

## வாலாஜாபேட்டை.

இந்த அச்சியந்திர சாலையில், பலவித கலரினால், இங்லீஷ், தமிழ், தெலுங்கு முதலிய பலவித வேலைப் பாடமைந்த அச்சுவேலைகளும், புத்தகம் முதலியவை களுக்கு நூல் சுத்தமாகப்போடுதலும், சகலவிதமான பைண்டிங்வேலைகளும், ஆர்டர்கொடுத்தோர்கள் கண் ணும் கருத்தும் ஒருங்கேகவரும்படி குறித்தகாலத்தில், குறைந்த கட்டணத்திற்கு, மிகவும் சுத்தமாய்ச் செய்து கொடுக்கப்படும். இது, அரசாங்கத்தாருடையவேலைக ளும், மற்றும் பலவிதமான கச்சேரிகளின் வேலைகளும், ஜாப் வேலைகளும், மிக்கநேர்த்தியாகவும் குறித்ததவணை கெடாமல் கொடுத்தநிலையும், டெ பெருமைதங்கிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகிய உத்தியோகஸ்த்தர்க ளால், அநேக நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்றும், யாவரும் மகிழ்ந்து புகழும்படி நடந்து வருகிறது. ஆகையால் இதைக் கண்ணுறும் கனதனவான்கள் யாவரும் தங்களு க்குவேண்டிய அச்சுவேலைகளை இவ்விடமே கொடுப்பார் களாயின், அன்னோர் முழுதிருப்திக்கேற்ப வெகு விநோத அலங்காரங்களுடன் அச்சிட்டுக் கொடுக்கப்படும். விரிவ ன்றி இன்னும் விஸ்தரிக்காது விடப்பட்டது.

காரை. பொன்னரங்க முதலியார்.

---

இப்புத்தகம் காரை. பொன்னரங்க முதலியார் அவர்களது வாலாஜா, "ஸ்ரீ கிருஷ்ண அச்சியந்திரசாலையில்" பதிப்பிக்கப்பட்டன.